Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-07 | 23-10-2004 | சனிக்கிழமை | ஓசை -248




## முல்லையில் இளைஞர் காணாமல் போனமைக்கு அங்கு நிலை கொண்டிருந்த இராணுவமே காரணம்

### - வவு. நீதிமன்றம் தெரிவிப்பு

(செட்டிகுளம்)

முல்லைத்தீவில் இளைஞர் ஒருவர் காணாமற் போனதற்கு இராணுவமே காரணம் என்றும் வவுனியா நெளுக்குளத்தில் இளைஞர் ஒருவர் காணாமற் போனதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் குழுவே முக்கிய காரணம் என்றும் வவு. நீதிமன்றம் தெரிவித் துள்ளது.

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவம் நிலை கொண்டு இருந்த போது கைதாகிக் காணாமற் போயிருந்தவர் காணமற் போவதற்கு அப்போது அப்பகுதியில் நிலை கொண்டு இருந்த இராணுவமே காரணம் என்று வவுனியா மாவட்ட நீதிமன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.பிரதிவெளி விவகார அமைச்சர் நவம்பரில் இலங்கை விஜயம்

அமெரிக்கப் பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆர்மிரேஜ் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை தெற்காசிய நாடுகளுக்கும், விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆர்மிரேஜின் இலங்கை விஜயத்தின் போது சிறிலங்கா சனாதிபதி உட்படப் பல முக்கிய தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாகவும் இவரது இலங்கை விஜயத்திற்கான திகதி இன்னமும் அறிவிக்கப் படவில்லை யென்றும் அடுத்த மாதம் அமெரிக்க சனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆர்மிரேஜின் இலங்கை விஜயத் திற்கான திகதி அறிவிக்கப்படுமென்று அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவிககின்றன.

# சமாதானச் செயற்பாடுகளில் புலிகள் அர்ப்பணிப்புடன் இருந்து வருகின்றனர்!

### சர்வதேச சமூகத்திற்கு சு.ப.தமிழ்ச்செல்வன் மீண்டும் வலியுறுத்தித் தெரிவிப்பு

**இலங்கைத் தமிழ் மக்களின் பொறுப்பு வாய்ந்த விடுதலை இயக்கம் என்ற வகையில் சமாதானச் செயற்பாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதை சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் உறுதிப்படுத்துவதாக அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுவீடனில் தெரிவித்துள்ளார்.**

சுவீடன் தலைநகர் ஸ்ரொக்கொம்மில் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலர் அனிதா பெனரைச் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு கூறினார்.

பல தடவைகளுக்கு மத்தியில் யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பேணி வருவதாகவும், கூறிய அவர் சமாதானச் செயற்பாடுகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி முன் வந்துள்ளதாகவும் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினையில் ஆர்வம் காட்டி வரும் சுவீடன் வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலாளர், சு.ப தமிழ்ச்செல்வனிடம் கூறுகையில் இலங்கையின் தென் பகுதியில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசியல் கட்சிகள் பொது உடன்பாடு ஒன்றைக் காணமுடியாமல் இருப்பதையிட்டு சுவீடன் வெளிவிவகார அமைச்சின் இரா (12ஆம் பக்கம் பார்க்க)



## சிறுமி மீது பாலியல் பலாத்காரம் பொலிஸ் அதிகாரி மீது வழக்கு

வவுனியா மாமடுவ பகுதியைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் 14 வயதுச் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் புரிந்து அந்தச் சிறுமிக்கு பிள்ளை பிறந்து இருப்பதாக வவுனியா நீதிமன்றில் வவுனியா சிறுவர் பெண்கள் பாதுகாப்புப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி சிறுமியைச் செட்டிகுளம் பிரதேசத்தில் இருந்து வீட்டுப் பணிக்காக அழைத்துச் சென்று தேனீருக்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்து பாலியல் பலாக்காரம் புரிந்ததாகவும், இவ்வாறு பலமுறை பலாக்காரம் புரியப்பட்டு பின்னர் இந்தச் சிறுமியை வீட்டில் சேர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது இந்தச் சிறுமிக்கு குழந்தை ஒன்று பிறந்திருப்பதாக வவுனியா பொலிஸ் சிறுவர் பெண்கள் பாதுகாப்புப் பிரிவு வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இது தொடர்பாக பொலிசார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நபர் பொலிஸ் உத்தியோகத்தராக வவுனியாவில் கடமையாற்றி இருந்தார் என்பதும் தற்போது அவர் சேவையில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

## தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி கிழக்கு பல்கலையில் கருத்தரங்கு

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் வகையில் நேற்று முன்தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர் தமிழ்த்தேசியத்தைக் கட்டி எழுப்பி ஒரே தேசியத் தலைமையின் கீழ் நாம் அனைவரும் அணி திரண்டு உரிமையை வென்றெடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக கல்விச் சமூகம் இதில் கலந்து கொண்டது.

## நோர்வே அனுசரணையாளர்களூடாக புலிகளுடன் கருத்துப் பகிர்வு தொடர்கிறது

### - சிறில.சனாதிபதியின் பேச்சாளர் ஹரிம்பீரிஸ்

நேரடிப்பேச்சுக்கள் நின்று போனாலும் நோர்வே அனுசரணையாளர்களினூடாக இந்தப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் போது எவையெவை விவாதிக்கப்பட வேண்டும் என்ற கருத்துப் பகிர்வுகள் நடந்து கொண்டேதான் இருகக்கின்றன. இவை தொடர்பான விபரங்களைக் கூற இயலாத நிலையில் இருக்கின்றேன்.

எனவே இதற்கு ஒரு தீர்வு காண்போம் என்பதில் எச்சரிக்கை கலந்த நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்றார். சனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ்.

இவர் அண்மையில் லண்டன் சென்றிருந்த வேளை பி.பி.ஸி இன் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கை அமைதிப் பேச்சு வார்த்தைகள் நின்று போய் ஓராண (12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா விசாபெறபோலி ஆவணம் முன்னாள் மு.கா. பா.உ மீது வழக்கு

கனடாவிற்கு விசா பெற போலி ஆவணங்களைத் தயாரித்து சமர்ப்பித்ததாகக் குற்றம் சுமத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.பி.எஸ்.புஷ்பகுமார உட்பட 3 பேருக்கு எதிராக சி.ஐ.டி. யினரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள கனேடிய உயர் ஸ்தானிகராலயம் செய்த முறைப்பாட்டையடுத்து சி.ஐ.டி.யினரின் விசாரணையின் பின்பு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடியில் இவரது மனைவியும் இணைப்புச் செயலாளரும் சம்பந்தப்பட்டிருப்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

### 2005ஆம் ஆண்டு வரியட்டை பெறவும்

01.11.2004முதல் 2005ஆம் ஆண்டுக்கான ஊர்திகளுக்கு வரியட்டை வழங்கப்பட உள்ளது இதனைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி, மல்லாவி, புதுக்குடியிருப்பு, ஆண்டாங்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பிரதேச செயலகங்களில் விதிமுறைகளுக்கு அமைய 2005 ஆம் ஆண்டு வரியட (12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அன்பு இல்ல நிர்வாகம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் சமூக சேவை நிறுவனமான 'அன்பு இல்லம்' நிர்வாகம், அங்கு தங்கியுள்ள சிறார்களின் பராமரிப்பு ஆகியனவற்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் மூன்று மாதங்களுக்கு ஒப்படைக்கும்படி திருகோணமலை நீதவான் எம். கணேசராஜா நேற்று வெள்ளிக் கிழமை உத்தரவு பிறப்பித்தார். வடக்கு-கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை, பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை ஏற்று, நீதவான் கணேசராஜா இத்தீர்ப்பை வழங்கினார்.

"அன்பு இல்லம்" நிறுவனத்தை (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பம் அரச உத்தியோகம் நற்பண்புடைய 28வயது திருவாதிரை நட்சத்திர மணமகனுக்கு அழகிய நற்பண்புடைய மணமகள் தேவை "புதியபாலம்" தபால்பெட்டிஇல-10, வவுனியா. (5203)

### காணி விற்பனைக்கு

இடம்கணேசபுரம், (36/2) ஏக்கர்1/4 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு முகவரி இல:385,ஜெயந்திநகர், கிளிநொச்சி, (சந்தைமுன்பாக) (4926)

### தவறிவிட்டது

கண்ணப்பன் விஜயகுமார் ஆகிய எனது மணிப்பேஸ் (சிவப்புக்கலர்) 20.10.2004ஆம் திகதி சந்தைக்கும் பழைய பேருந்து நிலையத்திற்குமிடையில் தவறிவிட்டது. தே.அ.அட்டை நிரந்தர பாஸ், மனிதநேய கண்ணிவெடிப்பிரிவு அடையாள அட்டையும் இதில் உள்ளது. கண்டெடுத்தவர்கள் மனித நேய கண்ணிவெடி அலுவலகம், கிளிநொச்சி அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல்: க.விஜயகுமார். (5210)

# தியாகி திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் கடந்த செப்ரெம்பர் மாதம் 18656 பேருக்கு சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த செம்டம்பர் மாதம் 12 நிலையங்களிலிருந்தும் 18656 பேருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. இதில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையங்களான கற்சிலைமடுவில் 2468 பேருக்கும் மாங்குளத்தில் 3203 பேருக்கும் ஆரிய வளையில் 2078 பேருக்கும், அளம்பிலில் 1860 பேருக்கு, பூநகரியில் 1832 பேருக்கும்,புளியங்குளத்தில் 1687பேருக்கும்,புங்குடுதீவில் 1542 பேருக்கும், அடம்பனில் 1251 பேருக்கும்,ஐயங்கன்குளத்தில் 1181 பேருக்கும்,கதிரவெளியில் 1041 பேருக்கும், பாட்டாளிபுரத்தில் 1003 பேருக்கும், நைனாமடுவில் 404பேருக்குமாக மொத்தம் 18656 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களுள் சுவாசப் பாதைத் தொற்றினால் 3509பேரும், வைரஸ்க்காய்ச்சலினால் 3615 பேரும்,இடுப்பு வலிப்பினால் 2230 பேரும்,காயங்களினால் 1760 பேரும்,சிறுநீர் வழித் தொற்றினால் 267பேரும்,மலேரியாக் காய்ச்சலினால் 202 பேரும் தோல்நோய்களினால் 809 பேரும், பல்நோய்களினால் 267 பேரும், நெருப்புக் காய்ச்சலினால் 08பேரும்,காதுத்தொற்றினால் 105 பேரும், கண் நோயினால் 110 பேரும்,வயிற்றோட்டத்தினால் 293 பேரும்,வலிப்பினால்187பேரும்,குடற்புழுத் தொற்றினால்1879பேரும், இதய நோய்களினால் 54பேரும், குருதிச்சோகையினால் 326 பேரும், குடற்புண்ணினால் 278பேரும், ஒவ்வாமையினால் 570 பேரும்,நாய்க்கடியினால் 96 பேரும், பாம்புக் கடியினால் 20 பேரும், உயர்குருதியமுக்கத்தால் 330 பேரும், தொய்வினால் 591 பேரும் உட்பட மொத்தமாக 18656 நோயாளர்கள் கிசிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் நடமாடும் மருத்துவ சேவையாக வைத்தியர் தேவா அவர்களால் 2539 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த நடமாடும் மருத்துவ சேவையானது 30 இடங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இங்கிலாந்திலிருந்து வருகைதந்த மருத்துவரின் சிறப்பு மருத்துவ முகாம்

இங்கிலாந்திலிருந்து வருகை தந்த வைத்தியக் கலாநிதி சாம் முத்துவேல் தலைமையிலான குழுவினர் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினருடன் இணைந்து திலீபன் மருத்துவ சேவை நிலையங்களான ஐயன்கன்குளம், பூநகரி, புளியங்குளம், மாங்குளம் போன்றவற்றில் 18.10.2004 தொடக்கம் 22.10.2004 வரை பொது மருத்துவம், கண் மருத்துவம் போன்ற சிகிச்சைகள் மேற்கொண்டனர். இதில் பொது மருத்துவத்தில் 775 இற்கு மேற்பட்டோரும் கண் மருத்துவத்தில் 650இற்கும் மேற்பட்டோருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

## மன்னார் மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்



(மன்னார்)

மண்டூர் மாவட்டத்தில் 2004இல் நடாத்தப்பட்ட 05ஆம் ஆண்டு புலமைப்பரிசுப் பரீட்சையில் மண்டூர் வங்காலை புனித அருள்மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் செல்வி. நியூர்சியஸ் வேர்ஜின் லெம்பேட் என்பவர் 164 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடம்பெற்றுள்ளார் (மி)

## மிகவும் சீர் கெட்ட நிலையில் கிளி-திருவையாறு வீதி

(அலுவலக செய்தியாளர்)

கிளி.டிப்போச் சந்தியிலிருந்து திருவையாறு கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருப்பதனால்



ஒவ்வொரு நாளும் மக்கள் விபத்துக்குள்ளாகி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அக்கிராமத்தின் அபிவிருத்திச்சங்கத்தினர் கருத்து வெளியிடுகையில் இப்பகுதி சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட பின் மக்கள் மீண்டும் குடியேறியுள்ளனர். பல இடப் பெயர்வுகளைச் சந்தித்ததால் தற்போது மக்கள் மிகவும் கஸ்ட நிலையினை எதிர் நோக்கியுள்ளதோடு பொருளாதர ரீதியிலும் பின் தங்கியே காணப்படுகின்றனர்.

அத்தோடு விவசாயத்தினையே முதன்மைத் தொழிலாகக் கொண்ட இம்மக்கள் உற்பத்திப்பொருள்களை சந்தைப்படுத்தக் கிளிநொச்சி அங்காடிக்கே செல்லவேண்டியுள்ளது. இதன் போது வீதியால் பொருட்களுடன் பயணிப்போர் வீதியில் உள்ள பாரிய குழிகளில் வீழ்ந்து காயமடைவதோடு கொண்டு செல்லும் பொருட்களும் பாரிய அளவில் சேதமாகின்றன.

அத்தோடு பாடசாலை மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லும் போதும், கல்வி நிலையங்களுக்குச் செல்லும் போதும் பெரும் இடர்களை எதிர் சொண்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்ட அவர்கள் . அரச அதிகாரிகளுக்கும் பல அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தியுள்ள போதும் எந்தவித சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை எனவும் தற்போது பெய்து வரும் மழையினால்வீதியின் நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது. எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச,தீ)

## கிளி.யில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் 2004.11.13, 2004.11.14 ஆகிய சனி, ஞாயிறு தினங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கலுக்கான நடமாடும் சேவை நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச் சேவையில் முதலில் எழுத்துப்பரீட்சை 2004.11.13, 2004.11.14 ஆகிய தினங்களில் நடைபெறும். சித்தியடையும் பரீட்சார்த்திகளுக்கு வேறொரு தினத்தில் செயன்முறைப் பரீட்சை நடாத்தபெறவுள்ளது.

மற்றும் 2004ஆம் ஆண்டு முற்பகுதியில் புதிதாக விண்ணப்பித்த 450 விண்ணப்பதாரிகளும் மிகுதிக் கட்டணம் ரூ.30/= செலுத்தப்பட வேண்டும்.

2003 ஒக்ரோபர் மாதம் இச் செயலகத்தில் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையில், சித்தியடையத் தவறியோருக்கும் அன்றைய தினம் எழுத்துப் பரீட்சை நடைபெறும். அவர்களின் முன்னைய விண்ணப்பங்கள் ஒரு வருடத்திற்கு மேலாகி காலாவதியாகியுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் ஏனைய ஆவணங்களுடன் புதிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் அவையாவன:-

பூர்த்தியான விண்ணப்பப் படிவம், வைத்திய சான்றிதழ், தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி, புகைப்படங்கள் மூன்று (கறுப்பு வெள்ளை), பிறப்புச் சான்றிதழ் போட்டோ பிரதியுடன் மூலப்பிரதி, கட்டணம் ரூ.650/=

அத்தேடு அனைத்து விண்ணப்பதாரிகளும் நவம்பர் 05ஆம் திகதிக்கு முன்பாக மாவட்டச் செயலகத்தில் அவர்களுக்கான சுட்டிலக்கத்தினைப் பெற்று பரீட்சைக்கு சமூகமளிப்பதினை உறுதிப்படுத்தல் வேண்டும். உறுதிப்படுத்தத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குச் சமூகமளிக்க இடமளிக்க மாட்டார்கள் எனவும் மேலும், அனைத்துப் பரீட்சார்த்திகளும் வீதியொழுங்கு வீதிகளில் போதிய அறிவுடன் பரீட்சைக்குச் சமூகமளித்து சித்தியடைந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன் வீதியொழுங்கு வழிகாட்டி நூல் மாவட்டச் செயலகத்தில் பெற்றுகொள்ள முடியும் எனவும் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ.கு)

## விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் பரந்தனில் புகைப்படங்கள் காட்சி

தமிழீழ காவல் துறையின் வாகன போக்குவரத்துப் பிரிவினர் வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்குடன் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக கடந்த காலங்களில் வாகனச் சாரதிகள் வீதிப் போக்குவரத்து சட்ட விதிகளைப் பின்பற்றாமல் நடைபெற்ற வீதி விபத்துக்களில் பலியான, காயமடைந்த மக்களின் புகைப்படங்கள், விபத்தின் போது சிதைந்த வாகனங்கள் ஆகியவற்றின் புகைப்படங்கள் வாகன ஓட்டுநர்கள், மக்களின் பார்வைக்காக 18.ஆம் திகதி பரந்தன் சந்திப் பகுதியில் காட்சிப் படுத்தியிருந்தனர். அத்தோடு வாகன ஓட்டுநர்களுக்கு வீதிப் போக்குவரத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய சட்டம், ஒழுங்குகள் பற்றிய அறிவுரைகளும் வழங்கினர். இப் புகைப்படங்களை நேரில் பார்த்த பலர் அதிர்ச்சிக்குள்ளாகிக் காணப்பட்டனர். (14)

## கலந்துரையாடல்

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் மிக முக்கியமான விடயம் தொடர்பாக கலந்துரையாட வேண்டி இருப்பதனால் அனைவரும் இன்று பி.பகல் 3.00மணிக்கு சிறி. சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (08)

## சாவு அறிவித்தல்

### கதிர்காமு குலசேகரம்

யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகவும், உடையார்கட்டு தெற்கினை வசிப்பிடமாகக் கொண்டவருமான கதிர்காமு குலசேகரம் அவர்கள் 21.10.2004 அன்று இறைபதம் எய்தியுள்ளார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

(5215)

### காணி விற்பனைக்குண்டு

A-9 வீதி கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமையில் 15'X100' விஸ்தீரணம் கொண்ட கடைக்கட்டடமும் அத்துடன் பராசக்தி தியேட்டருக்கு அருகாமையில் வீடுடன் கூடிய காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு மு. ஆறுமுகன் எமேசன் ரோட், கிளிநொச்சி.

(5213)

## கண்ணீர் அஞ்சலி



| இறைமடியில் பிறப்பு | காலன் அடியில் இறப்பு |
|---|---|
| 1965 | 2004 |
| 05 | 10 |
| 14 | 22 |

### திரு.கதிராமு குணசேகரன் அவர்கள்

குணமென்ற இமயமது சரிந்ததிந்த கோலம்
மேனியதை வாட்டிநிதம் பதறியழும் ஈரம்
ஐயோ என்று ஆர்ப்பரிக்கும் மனையாளின் கீதம்
அப்பாவைத் தேடி எல்லாம் கதறுகின்ற பிள்ளைகளின் துயரம்
இது எம் மனதைப் பிழிகின்ற கடவுளது திட்டம்.
"மதி" என்ற மைத்துனனின் அவலமது கேட்டு நின்று-நாம்
உளமதனால் நீர்சொரிந்தோம் உள்ளமது வெம்பி.

முகாமையாளர், "பணியாளர்கள்"
"தமிழீழ போக்குவரவுக்கழகம்"
சுமையுந்துப் பகுதி, விசுவமடு.

(5214)

# ஈராக்கின் பலூஜா நகர்ப் பகுதியை மீட்க அமெரிக்கா பாரிய இராணுவ நடவடிக்கை!

## பிரிட்டிஷ் படையினரும் பாக்தாத்திற்கு நகர்வு

(பாக்தாத்)

**ஈராக்கில் தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ள பலூஜா நகர் மீது அமெரிக்கா பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாராகி வருகிறது. இதற்கு உதவியாக தென்பகுதியிலிருந்த பிரிட்டிஷ் படையினரில் ஒரு பகுதியினர் அமெரிக்க வற்புறுத்தலுக்கிணங்க பாக்தாத் அனுப்பபட்டுள்ளனர்.**

ஈராக்கில் தீவிரவாதிகளுக்கெதிராக அமெரிக்க இராணுவம் இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்ள உதவும் விதத்தில் பிரிட்டிஷ் இராணுவ வீரர்கள் பாக்தாத்தின் நகர் புறத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

பலூஜா நகரம் போன்ற தீவிரவாதிகளின் முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் அமெரிக்கப் படையினர் கடும் தாக்குதலை நடத்துவதற்கு உதவும் வகையில் பிரிட்டிஷ் இராணுவம் வட பகுதிக்கு அனுப்பப்படும் என்று நேற்று முன்தினம் பிரிட்டிஷ் அறிவித்திருந்தது. இதுவரை ஈராக்கின் தென்பகுதி நகரமான பஸ்ராவில் மட்டுமே பிரிட்டிஷ் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர்.

ஈராக்கிய யுத்தம் ஆரம் பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் உயி ரிழந்த போதிலும் 64 பிரிட்டிஷ் இராணுவ வீரர்களே இறந்துள் ளார்கள். இராணுவ வட்டாரங்கள் தகவல் தருகையில் பிரிட்டிஷ் வீரர்கள் வடபகுதிக்குப் போய்ச்சேர்ந்ததும் பலூஜா நகர் மீது கடும்தாக்குதல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவீன நீர்மூழ்கி குத்தகைக்கு!

அணுவாயுதம் மற்றும் ஏவுகணைகள் செலுத்தக்கூடிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை ரஷ்யா இந்தியாவுக்கு குத்தகைக்கு விட்வுள்ளது.10 ஆண்டுகளுக்கான குத்தகை உடன்படிக்கையில் இருநாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

## 'ஹமாஸ்' மூத்த தளபதியொருவர் இஸ்ரேலிய தாக்குதலில் பலி!

காஸாப் பகுதியில் நேற்று முன்தினம் இஸ்ரேலிய விமானமொன்று நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்ததளபதி கௌவ்ல் கொல்லப்பட்டுள்ளார்.

இவர்சென்ற வாகனத்தில் இருந்த மற்றொருவரும் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார், கௌவ்ல் வெடிகுண்டுகள், மற்றும் ஏவுகணைகள், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை உருவாக்குவதில் நிபுணராக இருந்துவந்துள்ளார் எனக் கூறப்படுகிறது. நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இஸ்ரேல் -பலஸ்தீன சண்டையில் இவர் உருவாக்கிய ஏவுகணை தாக்கி நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



தாக்குதலில் சிதறிய வாகனம்

## சீனாவில் நிலக்கரி சுரங்க விபத்து இருநூறுக்கும் அதிகமானோர் பலி!

### 84 பேரை மீட்க பெரும் பிரயத்தனம்



சீனா டப்பிங் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து ஒரு சுரங்கத் தொழிலாளியின் உடலை மீட்புப் பணியினர் காவிச் செல்வதை சீனச் சுரங்கத் தொழிலாளர்கள் அவதானிக்கின்றனர்.

(பீஜிங்)

சீனாவில் உள்ளநிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 204 பேர் பலியானார்கள். விபத்தின் போது சுரங்கத்தில் இருந்த 290 பேர் உயிர் பிழைத்தனர்.

மேலும் 84 பேர் சுரங்கத்தினுள் சிக்குண்டு இருப்பதாகவும், அவர்களை மீட்க முடியாத நிலை காணப்படுவதாகவும் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் ஹெனான் மாநிலம் ஷின்மி என்ற இடத்தில் ஒரு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. இங்கு புதன்கிழமை காலையில் 400இற்கும் மேற்பட்டவர்கள் பணியில் இருந்தனர். காலை 10.47மணிக்கு இங்கு வாயு வெடிப்பு ஏற்பட்டது. இதில் 56 பேர் பலியானார்கள். 148 பேர் காணாமற் போய்விட்டனர். என்று முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன. பிறகு வந்த தகவல்கள் அந்த 148 பேரும் பலியாகி விட்டதாகத் தெரிவித்தன. இதனால் மொத்தம் 204 பேர் பலியானார்கள்.

இந்த விபத்தில் காயம் அடைந்து. இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களை மீட்பதற்காக மீட்புக் குழு சுரங்கத்துக்குள் அனுப்பப்பட்டுள்ளது. சீனாவில் சுரங்கத் தொழில் உலகிலேயே மிகப்பெரியது. இங்கு விபத்து ஏற்படுவது வாடிக்கையானது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கானவர்கள் விபத்தில் பலியாவது வழக்கமான ஒன்று ஆகும்.

## இந்திய விஞ்ஞானிகள் மீதான அமெரிக்க தடை மறுபரிசீலனை!

ஈரானின் அணுவாயுதத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங் கியதாகக் கூறப்படும் இந்திய விஞ்ஞானிகள் இரண்டு பேர் மீது விதிக்கப்பட்ட தடைகள் குறித்து அமெரிக்கா மறுபரிசலனை செய்யக்கூடுமென தெரிய வருகிறது.

ஆயினும் அவர்கள் சம்பந்தப் படவில்லையென்பது உறுதிப் படுத்தக்கூடிய வலுவான ஆதாரங்களை முன்வைக்குமாறு அமெரிக்க அரசு இந்தியாவைக் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் பணியாற்றிய மேற்படி இரு இந்திய விஞ்ஞானிகளும் ஈரானின் அணுவாயுதத் திட்டங்களுக்கு உதவியளித்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் அண்மையில் குற்றம் சாட்டியதுடன் அது தொடர்பாக விசாரணைகளும் மேற் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

## மேடையிலிருந்து தவறிவீழ்ந்த கஸ்ரோவின் கால் முறிந்தது!

(ஹவானா)



கியூபா நாட்டு அதிபர் காஸ்ட்ரோ ஒரு விழாவில் கலந்து கொண்டு விட்டு, மேடையில் இருந்து கீழே இறங்கிய போது கால் தவறிக் கீழே விழுந்து விட்டார். இதில் அவர் கால் முறிந்தது.

அமெரிக்கா அருகே உள்ள கம்யூனிஸ்டு நாடு கியூபா அதன் அதிபராக நீண்ட காலமாக இருப்பவர் பிடல்காஸ்ட்ரோ. இவர் சாண்டா கிளாரா நகருக்குச் சென்றார். அங்கு ஒருபட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு ஒரு மணிநேரம் பேசினார். அதன்பிறகு அவர் மேடையில் இருந்து படிகளில் இறங்கிய போது கால்தவறிக் கீழேவிழுந்தார். இதைப்பார்த்த அவரது பாதுகாவலர்கள் அவரைத் தூக்கி ஒரு நாற்காலியில் உட்காரவைத்தனர். அதைப்பார்த்த கூட்டத்தினரில் சிலர் கண்ணீர்விட்டுஅழுதார்கள். இதைத்தொடர்ந்து காஸ்ட்ரோ 'மைக்'கை வாங்கிப் பேசினார். அருமைப்பட்டதாரிகளே, நான் கீழேவிழுந்ததற்காக என்னை மன்னித்து விடுங்கள். வதந்தி பரவுவதை தடுப்பதற்காகச் சொல்லி விடுகிறேன். கால்முட்டியில் எலும்பு முறிவு ஏற்பட்டு உள்ளது. கையிலும் முறிவு ஏற்பட்டிருக்கலாம். காலில்கட்டுப்போட்டாலும் தொடர்ந்து என் வேலையைக் கவனிப்பேன். இவ்வாறு காஸ்ட்ரோ கூறினார். அதன் பிறகு காரில் அவர் அங்கு இருந்து புறப்பட்டுச் சென்றார்.



ஜப்பானில் ஏற்பட்ட சூறாவளி, வெள்ளம் காரணமாக பாதிக்கப் பட்டவர்களை வள்ளத்தில் ஏற்றிதள்ளிக் கொண்டு வரும் மீட்புப் படையினர் 10 வருடங்களில் இல்லாத கடும்சூறாவழி மற்றும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 55 பேர் பலியாகினர் 300 பேர் காயமடைந்துள்ளனர்.

## தென்கிழக்காசிய நாடுகள் உச்சிமாநாட்டில் கம்யூனிஸ்டுக்கள் தாக்குதல் நடத்தலாம்!

### -லாவோஸுக்கு அமெரிக்கா எச்சரிக்கை-

லாவோஸ் தலைநகரான மியன்ரியானில் அடுத்த மாதம் தென்கிழக்காசிய தலைவர்களின் உச்சிமாநாடு இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், இம்மாநாடு இடம்பெறும்வேளை, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த லாவோஸ் வாசிகள் குண்டுத்தாக்குதலை நடத்தலாம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இவர்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவார்கள் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. ஆனால்,தமக்கு எந்த விதமான அச்சுறுத்தலும் கிடைக்கவில்லையென்று லாவோஸ் அரசாங்கம் கூறு கின்றது.

நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் 10 தென்கிழக்காசிய நாடுகளும், சீனா, தென்கொரியா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

லாவோஸ் மிகச் சிறிய நாடாயினும் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் அது ஒரு பாதுகாப்பான இடம் என்று லாவோஸ் வெளிநாட்டமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 வருடங்களாக இனந்தெரியாத கிளர்ச்சிக்காரர் சந்தை, பஸ் நிலையம், எல்லைக் கண்காணிப்பு நிலையம் ஆகிய இடங்களில் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

1975ஆம் ஆண்டு வியட்நாம் யுத்தம் முடிவடைந்த பின்னர் லாவோசில் ஆட்சி புரிந்த கம்யூனிஸ்ட் அரசாங்கம் 4 வருடங்களுக்கு முன்னர் பதவியை இழந்தது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ் பென்சில்வேனியாவில் தனது ஆதரவாளர்களுடன் கைகுலுக்குகின்றார். சனாதிபதி தேர்தலுக்கான இறுதிக்கட்ட பிரச்சாரத்தின் போதே அவர் இவ்வாறு காணப்பட்டார்.

# மாவீரர் நாளையொட்டி கவிதைப்போட்டி
# த.க.கழக திருமலை கிளை நடவடிக்கை

(திருகோணமலை)

**தமிழீழ தாயக விடிவிற்காக தம்முயிர் ஈந்த மாவீரர்களின் நினைவினை மீட்டிப்போற்றும் உன்னதமான நாட்களினைச் சிறப்பிக்கும் முகமாக கவிதைப்போட்டியை தமிழீழக்கல்விக்கழக திருகோணமலை மாவட்ட நிர்வாகம் நடாத்தவுள்ளதாக கல்விக்கழக திருமலை மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்துள்ளார்.**

கவிதைகள் அனுப்பப்பட வேண்டிய முடிவுத்திகதி நவம்பர் 10ஆம் திகதி ஆகும் கருப்பொருள் 'மாவீரர் உயிர்க்கொடை, மண் மீட்பு" என்பவற்றை உள்ளடக்கியதாக கவிதைகள் மரபுசார்ந்தோ, புதுக்கவிதையாகவோ ஆக்கப்படலாம்.

கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:- "மாவீரர்நாள் கவிதைப்போட்டி - நவம்பர் 2004" திட்டமிடல் பணிப்பாளர், வலயக் கல்விப்பணிமனை திருகோணமலை, மூதூர் போட்டியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பகுதிநேர தொண்டர் ஆசிரியர்கள் பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு 25.11.2004 நிகழ்வின் போது பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (25)

# வவு.கல்வியல் கல்லூரி மீண்டும் திங்கள் ஆரம்பம்

(செட்டிகுளம்)

சுகாதார சீர்கேடு காரணமாக மூடப்பட்டு இருந்த வவுனியா பூந்தோட்டம் கல்வியல் கல்லூரி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாக இருப்பதாக அக் கல்லூரியின் பீடாதிபதி பேனாட் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் சுகாதார சீர்கேடு சரி செய்யப்பட்டு இருப்பதையடுத்து சுகாதாரப் பிரிவினர் கல்லூரியை ஆரம்பிக்குமாறு அறிக்கைதந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த வாரம் இங்கு கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு வயிற்றுளைவு ஏற்பட்டதன் காரணமாக சுகாதாரப் பிரிவின் வேண்டுகோளுக்கு இணங்க கல்லூரி மூடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவத்தில் சுமார் 70 இற்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் பாதிக்கப்பட்டு வவுனியா பொது மருத்துவமனையிலும் வெளி மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக விடுதலை புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினரும் சில நடவடிக்கைகள் எடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. திங்கட்கிழமை ஆரம்பமாகும் கல்வி நடவடிக்கையை அடுத்து மாணவர்கள் அனைவரும் ஞாயிற்றுக்கிழமை மாலை தமது தங்குமிட விடுதிகளுக்கு வருமாறு பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (32)



கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் சீர்குலைந்து போய் இதுவரை புனரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதுள்ள கண்டாவளைப் பிரதேசெயலகத்தைப் படத்தில் காணலாம். (ச)

# வவு.இல்.த.பு.கழகத்தால் 144 வீடுகள் புனரமைப்பு

(செட்டிகுளம்)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நிகொட் திட்டத்தின் கீழ் மீள் குடியமர்ந்து வரும் மக்களின் வீடுகள் புனரமைப்புச் செய்யப்பட்டு 144 வீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதாக வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தெரிவிக்கின்றது.

இந்த வேலைத்திட்டப்பணிகளை வடகிழக்கு மாகாண பிரதம பொறியியலாளர் எஸ்.மனோகரன், வவுனியா நிகொட் திட்டப் பணிப்பாளர் எம். கிருபாசுதன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வவுனியா மாவட்டப் பணிப்பாளர் எஸ்.டி. மூர்த்தி ஆகியோர் நேரடியாகச் சென்று அண்மையில் பார்வையிட்டுள்ளனர். அப்பகுதியில் மீள குடியமர்ந்துள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைபற்றியும் ஆராய்ந்துள்ளனர். நிகொட் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டுக்கும் 75,000 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பத்தலைவிகளுக்கு மேலும் 20,000 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## சேவை முன்பயிற்சி ஆரம்பம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் இருந்து இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 41 பட்டதாரிகளுக்கு சேவை முன் பயிற்சி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான இப் பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்விற்கு மன்னார்,வவுனியா மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளர் பத்மநாதன் தலைமை தாங்கினார். இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோ உட்படப் பலர் கலந்து கொண்டனர். (10)

# பூநகரி.ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் புதிய அங்கத்தவர்கள் சேர்ப்பு

இதுவரைகாலமும் அங்கத்தவராகச் சேர்ந்தவர்கள் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அங்கத்தவராகச் சேர்ந்தால் ஒவ்வொரு கிளையிலும் குலுக்கல் சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி மிக்க பரிசு வழங்கப்படுமென சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.(34)

# கட்டாக்காலி மாடுகளால் பூநகரி விவசாயிகள் கவலை

(பூநகரி)

பூநகரியில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் நிலையில் கட்டாக்காலி மாடுகள் பயிரைச் சேதப்படுத்துகின்றன.

இது விடயமாக பொருண்மியமும், பெரும்பாக உத்தியோகத்தரும் 10.10.2004 என கால எல்லை குறித்து ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு கேட்டிருந்தும் தற்பொழுது கட்டாக்காலியாகவே மாடுகள் திரிகின்றன. இதனால் விவசாயிகளுக்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. (34)

## 50 பயனாளிகளுக்கு விதை நெல் வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொண்டு வருபவர்களில் 50 பயனாளிகளுக்கு விவசாய திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து விதை நெல் இரண்டு புசல் வீதம் புதுக்குடியிருப்பு கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. (08)

## -வடக்குக் கிழக்கில்-
# சிறந்த நூலகங்களைக் கொண்ட பாடசாலைகளின் விபரம்

(திருகோணமலை)

சர்வதேச பாடசாலை நூலக நாளையொட்டி வடக்கு,கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையேயான நூலக நாள் நிகழ்வு ஒக்டோபர் 25 ஆம் திகதி அம்பாறை டி.ஸ் சேனநாயக்கா மத்திய மகா வித்தியாலயத்தில் கொண்டாடப் படவுள்ளது.

தகவல் தொடர்புசாதன அமைச்சரும் பிரதிக்கல்வி அமைச்சருமான மங்கள சமரவீர பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வலயங்களில் மிகச்சிறந்த நூலகமாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான விருதுகளும், நூல்பரிசுகளும், சான்றிதழ்களும் அன்றைய தினம் அமைச்சர் மங்கள சமரவீரவினால் வழங்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சிறந்த நூலகங்களைக் கொண்டவையாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் வலய ரீதியாக வருமாறு;

யாழ்ப்பாணம்:- வேம்படிமகளிர் கல்லூரி, வலிகாமம்:- சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, தீவகம்:- கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தியாலயம், தென்மராட்சி:- சாவகச்சேரி ஶ்ரீபேக் கல்லூரி, வடமராட்சி:- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வவுனியா தெற்கு:- வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா வடக்கு:- புதுக்குளம் ம.வித்தியாலயம், மூதூர்:- மூதூர் மத்தியகல்லூரி, திருகோணமலை:- உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி, கல் குடா:- வாழைச்சேனை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு:- பாலமீன் மடு விக்கினேஸ்வரா வித்தியாலயம், பட்டிருப்பு:- பட்டிருப்பு மகா வித்தியாலயம், கல்முனை:-கார் மேல் பாத்திமாக் கல்லூரி, அக்கரைப்பற்று:- அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி, சம்மாந்துறை:- சம்மாந்துறை முஸ்லிம் மத்திய ம.வித்தி, அம்பாறை:- டி.எஸ். சேனநாயக்கா ம.ம.வி, மஹா ஓயா:- கெப்பிற்றிப்பொல ம.வித்தியாலயம், தெஹியத்தக்கண்டிய:- சூரிய பொக்குணை ம.வித்தியாலயம்.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரிய நூலகர்களும் அம்பாறை நிகழ்வில் பங்குபற்றி சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளும்படி மாகாணக்கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கேட்டுள்ளார். (25)

## பரிசளிப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

றோயல் கல்வி நிலைய பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கோட்டக் கல்வி அதிகாரி திருமதி அரியரட்ணம் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

றோயல் கல்வி நிலைய பழைய மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஆங்கில வகுப்பு

(மல்லாவி)

மல்லாவியில் தமிழீழ மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் மேஜர் முரளி கணினி பயிற்சி நிலையத்தில் ஓய்வு பெற்ற ஆங்கில பட்டதாரி ஆசிரியையினால் நாளாந்தம் மாணவர்களுக்கு குறைநிரப்பு ஆங்கில வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளது.

மேலும் தரம் 1 தொடக்கம் 8 வரை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் அடிப்படையில் இருந்து ஆங்கிலம் முறையாகவும், விரிவாகவும் கற்பிக்கப்படும். அந்த வகுப்பில் இணைய விரும்பும் ஆசிரியர்கள், மாணவர்கள் சுய விபரங்களுடன் மேஜர் முரளி கணினி நிலையத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நாளை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி வகுப்பு ஆரம்பமாகுமென கணினி பயிற்சி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (24)

## சிரமதானம்

(மல்லாவி)

பாண்டியன்குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் மாவீரர் தினத்தை முன்னிட்டு இடம்பெற்றது.

50 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் இங்கு சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (24)

# மாவீரர் நாளை முன்னிட்டு பனம் விதைகள் நாட்டல்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கூளாமுறிப்பு கிராமத்தில் 5000 பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச பகுதியினரும், ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்திய இந்நிகழ்வு கூளாமுறிப்பு கமக்கார அமைப்பு தலைவர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே.தயாபரன், ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் தனபால்ராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் இதில் ஏராளமான கிராம மக்களும் கலந்து கொண்டனர். (05)

# மாவீரர் நாளையொட்டி சிரமதானப் பணி

முள்ளியவளைப்பிரதேச ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் வை.குமரனின் ஒழுங்குபடுத்தலில் மாவீரர் நாளினை முன்னிட்டு முள்ளியவளை நாவற்காடு கிராம மக்களினால் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து முள்ளியவளைப்பிரதேச மக்களினால் தொடர் சேவையாக மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி மூலம் துப்புரவு வேலைகள் இடம் பெற்று வருகின்றது. (ஆ)

# நித்திரையில் பாம்பு தீண்டி சிறுவன் பரிதாப மரணம்

வள்ளிபுனம் பகுதியில் இரவு வேளை நித்திரையிலிருந்த சிறுவனைப் பாம்பு தீண்டியதால் சிறுவன் மரணமான சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது, உறக்கத்திலிருந்த மேற்படி சிறுவனின் குடிசை வீட்டினுள் நுழைந்த பாம்பு சிறுவனது கழுத்துப் பகுதியில் தீண்டியதால் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியில் சிறுவனின் உயிர் பிரிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.பாம்பு தீண்டி இறந்த சிறுவன் உடையார்கட்டு மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் மாணவனான பரமலிங்கம்-பிரசாந் என்பவர் ஆவார். (19)

# நாவாந்துறைப் பகுதியில் திடீர் சோதனை
# சட்டவிரோத கொல்களம் கண்டுபிடிப்பு

### போலி றப்பர் முத்திரைகளுடன் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ சுகாதார சேவையினரும், பொது சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நேற்று முன்தினம் முற்பகல் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது யாழ். நாவாந்துறைப் பகுதியில் சட்ட விரோதமாக இயங்கிவந்த கொல்களம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

மேற்படி பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கொல்களங்கள் இயங்கி வருவதாகக் கிடைத்த தகவல் அடிப்படையில் தமிழீழ சுகாதார சேவையினர் தலைமையில் பொதுச் சுகாதாரப்பிரிவினர்மேற்கொண்ட திடீர் நடவடிக்கை மூலம் அப்பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் இயங்கி வந்த கொல்களம் கண்டு பிடிக்கப்பட்டது.

இக்கொல்களத்தில் உணவுத் தேவைகளுக்கு ஏற்றதல்லாத நோய் வாய்ப்பட்ட மாடுகள், திருட்டுத் தனமாகப் பிடிக்கப்படும் மாடுகள் வெட்டப்பட்டு சுகாதார சேவையினரால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சிகளைப் போல் போலி முத்திரைகள் பதிக்கப்பட்டு இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடிகள் இடம்பெற்று வந்த இக்கொல்களம் கண்டுபிடிக்கப்பட்டபோது அங்கிருந்துபாவனைக்குதவாத இறைச்சி 250 கிலோ மீட்கப்பட்டதுடன் இதனை நடத்திவந்த 4 பேர் சுகாதாரப் பிரிவினரால் பிடிக்கப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (33)

# றுகுணைப் பல்கலை மாணவர், விரிவுரையாளர்கள் சர்வதேச த.மா. பேரவையுடன் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

றுகுணைப் பல்கலைக்கழக மாணவர்களிடையேயான சந்திப்பொன்று கடந்த புதனன்று மாலை 4.00 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் இடம் பெற்றது.

இச் சந்திப்பில் றுகுணைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 40 இற்கு மேற்பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் குகன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட முன்னரும் அதன் பின்னரும் மக்களது வாழ்க்கை எவ்வாறு மாற்றமடைந்துள்ளது. அதன் மூலம் கிடைத்த நன்மைகள் என்ன என்பது தொடர்பாக மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காகவே இவர்கள் யாழ்.குடா நாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக மாணவர்களோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட இவர்கள் யாழ்.குடா நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றார்கள். (36)

# சுகாதாரத்திற்குக் கேடான முறையில் வைத்திருந்த பெருமளவு பாண்களை அழிக்க நீதிபதி பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பிரதான வீதியிலுள்ள வெதுப்பகமொன்றில் சுகாதாரத்திற்குக் கேடான முறையில் வைக்கப்பட்டிருந்த பெருமளவான பாண்களை அழித்துவிட யாழ் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்ட பாண் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்ட வேளையிலே மேற்கண்ட தீர்ப்பினையளித்த நீதவான்,வெதுப்பக உரிமையாளரை மூவாயிரம் ரூபா குற்றப்பணத்தைச் செலுத்தவும் உத்தரவிட்டார். (27)

# பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்ட பெண்ணுக்கு ஓராண்டு சிறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை வீதியின் கட்டைப்பிராய்ப் பகுதியில் நள்ளிரவு வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறிப் பெண்ணொருவர் கோப்பாய்ப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த சுமார் 35 வயதுடைய இப்பெண் தன்னை வெளிப்படுத்துவதற்கான அடையாள ஆவணங்கள் எதனையும் கைதுசெய்யப்பட்டவேளை கொண்டிருக்கவில்லையெனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் குறித்த பெண் ஆஜர்செய்யப்பட்ட வேளை தான் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து நீதவான் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன் குறித்த பெண்ணை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த பணிப்புரை விடுத்துள்ள நீதவான் தண்டனைக் காலத்தினை கைதடி இரட்சணிய சேனை இல்லத்தில் அனுபவிக்கவும் பணித்துள்ளார். (27)

# மண்டைதீவு அரசினர் மருத்துவமனையை மீளச் செயற்பட வைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்டைதீவு அரசினர் பொது மருத்துவமனையைப் புனரமைத்து அதனை மீள இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமென மண்டை தீவில் மீளக்குடியமர்ந்துள்ள பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மண்டைதீவு முழுவதும் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் படையினரால் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தாலும், அரசு-புலிகளுக்கிடையான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அப்பகுதிகளில் சுமார் 300 குடும்பங்கள் மீளக் குடியமரச் சென்றுள்ளன.

எனினும் அங்கு குடியேறிய மக்களின் அன்றாட மருத்துவ தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட உரிய வைத்தியசாலை வசதிகள் அங்கு இல்லை. இதனால் அங்கு மீளக்குடியேறியுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்து போயுள்ள மண்டைதீவு பொது அரசினர் மருத்துவமனையைப் புனரமைத்து மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (33)

# அனுமதியின்றி குளிர்பானவகை உற்பத்தி,விற்பனை மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதி பெறாது குளிர்பான வகை தயாரிப்பு மற்றும் விற்பனைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சாவகச்சேரி நகரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சாவகச்சேரி நகரிலும் அண்டிய பகுதிகளிலும் சுகாதார முறைகள் பேணப்படாது யூஸ், சர்பத் போன்ற குளிர்பான வகைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்து வருவோர் தொகை அதிகரித்திருப்பதால், ஏற்பட்டுள்ள சுகாதாரப் பிரச்சினைகளைக் கவனத்திற் கொண்டு இவ் எச்சரிக்கையை விடுத்துள்ள சாவகச்சேரி நகரசபை அனுமதி உரிமத்தை பெற்று குளிர்பான வகைகளை தயாரித்து விற்பனை செய்யவிரும்புவோர் உடனடியாகத் தம்மிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளது. (33)

## வாக்காளர் பட்டியலை பார்வையிடலாம்

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் தமது வாக்காளர்பட்டியலை (இடாப்பு) எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம்திகதி தொடக்கம் யாழ். அரச செயலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களை இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பித்தோர் தமது பதிவுகள் தொடர்பான விடயப்பரப்புகளை இடாப்பில் பார்வையிட்டு, அது குறித்து ஆட்சேபனைகளைத் தெரிவித்து அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் குறித்து மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (33)

# நாட்டார் வழக்காற்றியல் நூல் வெளியீடு

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. விசாகரூபன் எழுதிய நாட்டார் வழக்காற்றியல் நூல் வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் பிற்பகல்3.00மணிக்கு யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பீடாதிபதி கலாநிதி சன்முகதாஸ் தலைமையில் பல்கலைக்கழகப் புவியல்துறை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.மோகனதாஸ், கலைப் பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் ஆகியோர் வழங்கினார்கள்.

வெளியீட்டுரையை முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் இ.மகேந்திரமும், நூல் ஆய்வுரையை யாழ்.மாநகரசபை ஆணை யாளர் கலாநிதி க.குணராசாவும் நிகழ்த்தினார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சி.மோகனதாஸ் நூலை வெளியிட்டு வைக்க, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கல்வியற் பீடாதிபதி மா.சின்னத்தம்பி முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்..(41)

# பூநகரி நல்லூர் ம.வி.யில் புதிய கட்டடம் திறப்பு

பூநகரிக் கோட்டத்தில் கடந்த புதன் கிழமை நிகொட் நிறுவனத்தால் நல்லூர் ம.வியில் அமைக்கப்பட்ட முதலாவது இருமாடிக் கட்டடத்திறப்பு விழா காலை 10.00 மணிக்கு அதிபர் நா.கணேஸ்வரநாதன் தலைமையில் ஆரம்பமானது. பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை பாடசாலை ஆசிரியர் தி.விக்கினேஸ்வரன் ஆற்றினார்.அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கை மேலதிக அரச அதிபர் வேதநாயகம், வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், நிகொட் திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் ஏற்றினர். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார். தொடர்ந்து பிரதான மண்டபத்தை மேலதிக அரச அதிபர் வேதநாயகம் நாடாவை வெட்டித் திறந்து பெயர்ப்பலகையினைத் திரைநீக்கம் செய்துவைத்தார். அதனைத் தொடர்ந்து விஞ்ஞான ஆய்வு கூடத்தை வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நாடாவை வெட்டி பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். அடுத்து செயற்பாட்டறைக் கூடத்தை முன்னைநாள் அதிபர் சந்திரராசா திறந்து வைக்க, மாடிக்கட்டடத்தை தமிழீழ கல்விக்கழத்துணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்ரர் திறந்து வைத்தார். இறுதியாக வகுப்பறைக் கட்டடத் தொகுதியை நிகொட் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன் திறந்துவைத்தார். ஆசியுரையினைச் சிறப்பு விருந்தினரும், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளருமான சோ.தங்கன் வழங்கினார். தொடர்ந்து வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், நிகொட்திட்டப்பணிப்பாளர் பார்த்தீபன், தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருள் மாஸ்ரர் ஆகியோர் சிறப்பு ரைகளை ஆற்றினர்.

இம்மாடிக்கட்டடத்தை செய்துமுடித்த ஒப்பந்தக்காரர் குகன் கண்ணாடி அலுமாரி கொடுத்து அதற்குரிய திறப்பை கு.பிறேமச்சந்திரன் ஆசிரியரிடம் ஒப்படைத்தார். அவ்வூரைச் சேர்ந்த திருமதி. பாலசுப்பிரமணியம் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை உபஅதிபர் இ. சுந்தர மூர்த்தியிடம் வழங்கி பாடசாலைக்குக் கொடுத்தார். இறுதியாக நன்றியுரையை உபஅதிபர் இ.சுந்தரமூர்த்தி நிகழ்த்தினார். இந் நிகழ்வில் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு, வலயக்கல்விப்பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் கதிரவேற்பிள்ளை, கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (34)

# கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக ஒக்டோபர் முதல் மட்டக்களப்பு பிரகடனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின் தங்கிய மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டிமெல் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்தபுதன் மட்டு அம்பாறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வியமைச்சின் செயலாளரைச் சந்தித்து கலந்துரையாடினர். ஒக்ரோபர் மாதம் முதல் கல்வியால் பின் தங்கிய மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டு அதற்கேற்பவே கல்விசார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார். பல்கலைக்கழக அனுமதி, தேசியக் கல்வியியற் கல்லூரி அனுமதி போன்றவை பின்தங்கிய மாவட்டத்திற்கான சலுகை அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார். இச்சந்திப்பில் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினாகளான ஜோசப் பரராஜசிங்கம், எஸ். ஜெயானந்த மூர்த்தி, த.கனகசபை, பா. அரியநேத்திரன், க.தங்கேஸ்வரி, க.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் 22 விவசாயப் பிரிவுகளில் இருந்து சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 150 விவசாயிகள் நேற்று முன்தினம் காலை திருகோணமலை -செல்வநாயகபுரம் விவசாய விஸ்தரிப்பு நிலையத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்ட 150 சிறந்த விவசாயிகளில் 11 பேர் பெண்கள் ஆவர். அவர்களில் ஆறுபேர் சிங்களவர்கள், நான்கு பேர் தமிழர்கள், ஒருவர் இஸ்லாமியர். நெற் செய்கை உபஉணவுப் பயிர்ச் செய்கை, பழச் செய்கை, காய்கறிச் செய்கை மற்றும் விவசாயப் பிரிவுகளில் மாவட்டத்தில் சிறந்து விளங்கி சாதனை படைத்த விவசாயிகளே கௌரவிக்கப்பட்டனர். (25)

# வகுப்பறையில் கற்பித்தலை மேம்படுத்த உதவும் கணினி

இன்று கணினி பல்வேறு துறைகளிலும் பரந்து தனது செயற்பாட்டைச் செய்துவருகிறது. பெரும்பாலான செயற்பாடுகள் Micro Soft Word, Excel மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால் கணினிகள் அலுவலக செயற்பாட்டுடன் முடக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டிற்கு கணினி உதவமுடியும். இதன்மூலம் கற்போனுக்கு (மாணவர்களுக்கு) கற்றலில் ஊக்கமும், உற்சாகமும் ஏற்படுவதோடு, கற்பிப்பதிலும் ஆசிரியர்களுக்கு இலகுத்தன்மையும், புத்தாக்க உணர்வும் ஏற்படலாம்.

### எவ்வாறு கற்பித்தலில் கணினியைப் பயன்படுத்துவது?

Microsoft Power Point பயன்பாட்டின் மூலம் கற்பித்தலை வடிவமைத்து முன்வைக்கலாம். (Presentation) கற்பித்தல் விடயங்களை அழகான பின்னணியுடன் நீங்கள் விரும்பிய எழுத்து வடிவங்களில் மொழியில் கற்பித்தலை வடிவமைக்கலாம். அத்துடன் நீங்கள் விரும்பிய படங்களையும் உட்புகுத்தி விளங்கப்படுத்தலாம்.

**உதாரணமாக:-**

இலங்கையின் சனத்தொகை எனும் பாடத்தலைப்பில் பாடம் நடத்துவதாயின் இலங்கைப் படத்தை உட்புகுத்தித் தெளிவாகக் காட்டி கற்பித்தலை மேற்கொள்ளலாம். கணித செயற்பாட்டிற்கான வாய்ப்பாடுகள், விஞ்ஞான உபகரணங்கள் முதலியவற்றையும் காட்சிப்படுத்தலாம்.

வடிவமைக்கப்பட்ட TEXT களுக்கு விரும்பிய நிறங்கள், வடிவங்கள், அசைவு (Animation) களையும் வழங்கலாம். எவ்வாறு திரைப்படங்களில் எழுத்தோட்டத்தின்போது எழுத்துக்கள் அசைந்து ஆடுவது போன்று உள்ளதோ, அதேபோன்று விரும்பிய அசைவுகளை வழங்கலாம்.

அத்துடன் ஒலியமைப்பையும் TEXT களுக்கு வழங்கலாம் இதற்காக கணினியில் கைதட்டல், டெலிபோன் ஒலியமைப்புக்கள் விசேடமாக உள்ளன. இவைதவிர Cd மூலமும் விரும்பிய ஒலியமைப்புக்களை ஏற்படுத்த முடியும். மேலும் Sound Recorder மூலம் நாம் விரும்பிய கவிதைகள், பாடல்களையும் ஒலிப்பதிவு செய்து பயன்படுத்த முடியும்.

இவ்வாறு வடிவமைக்கப்பட்ட பாடப்பகுதிகளை (Clide) O.H.P மூலம் தெளிவாக அகல வெண்திரையில் காட்டிக் கற்பிக்க முடியும். இவற்றை நடைமுறையில் பெற்றுக்கொள்வது கடினமாயினும், கணினியை நேரடியாக வைத்துக் கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.

### எப்படி Power Point Presentation open செய்வது?

Start Program Microsoft powerpoint

### கணினி மூலம் பாடசாலைத் தகவல்களை ஒழுங்கமைப்பதற்கு ..............!

எமது பாடசாலைகளில் தகவல்களைக் கணினியில் இட்டுவைத்துப் பயன்படுத்துவதன் மூலம் வேலைப்பளுவை நாம் குறைத்துக் கொள்ள முடியும். கணினியில் இதற்கான வசதியை Access எனும தொகுப்பு (Application Software) வழங்குகிறது. இதில் தரவுத்தளம் (Data Base) ஒன்றை நிறுவுவதன் மூலம் இலகுவாகத் தரவுகளை உள்ளீடு செய்யவும் தேவையான வடிவங்களில் வெளிப்பெறவும் முடியும்.

பின்வரும் வசதிகளைப் பாடசாலையைப் பொறுத்து நாம் Data base பயன்பாட்டை மேற்கொள்ளலாம.

* மாணவர் விபரங்கள்
* ஆசிரியர் விபரங்கள்
* நிதி விடயங்கள்
*குணநல உள்ளீடு சம்பந்தமான விடயங்கள்
* நூலக விபரங்கள்
* சம்பள விபரங்கள்
* செயலமர்வுகளுக்குச் செல்ல வேண்டிய ஆசிரியர்கள் விபரம்.

முதலிய சகல விடயங்களையும் Data base மூலம் பதிவு செய்து வேண்டிய தகவல்களைப் பெறலாம்.

### தகவல்களை நாம் விரும்பியபடி எப்படிப் பெறுவது.....?

**Queries (கேள்விகள்)**

இச்செயற்பாட்டின்மூலம் உள்ளீடு செய்த தகவல்களை எமக்கு வேண்டிய வடிவத்தில் விரைவாகப் பெற்றுக்கொள்ளலாம். உதாரணமாகக் கணித செயற்பாட்டில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளில் 80 இற்குக் கூடிய புள்ளிபெற்றோர் விபரம், 1980 இற்கு முன் பிறந்த மாணவர் விபரம், எந்தத் தரவையும் ஏறுவரிசைப்படுத்துதல், இறங்குவரிசைப்படுத்துதல் முதலிய சகல விடயங்களையும் நிபந்தனைப் படுத்தி விரைவாகவும் தெளிவாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**Reports**

இதன்மூலம் எமது தரவுகளை அழகாக அட்டவணைகளில் வெளிப்படுத்திPrint செய்து கொள்ளலாம். இதில் கணித செயற்பாடுகளையும் அதாவது sum, count, avnrage..... போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

**Find(தேடுதல்)**

பதிவுசெய்யப்பட்ட தரவுகளில் ஏதாவது ஒன்றைத்தேடிக் கண்டு பிடிக்கவேண்டுமாயின் விரைவாகப் பெறவசதி உள்ளது.

Menu Bar Find Find கட்டளையைப் பயன்படுத்துவதன் மூலம் இதனைச் செய்யலாம்.

**எப்படி Access தொகுப்பை Open செய்வது......?**

Start Programs Microsoft Access.

# நதிக்கரையில் உள்ள நகரங்கள்

| நகரம் | நதி | நாடு |
|---|---|---|
| ஆக்ரா | ஜமுனை | இந்தியா |
| அக்யாப் | ஜமுனை | இந்தியா |
| பாக்தாத் | பிக்ரிஸ் | ஈராக் |
| பெர்லின் | ஸ்பீரி | ஜேர்மனி |
| ஜெய்ரே | நைல் | ஆபிரிக்கா |
| சிட்டகாங் | மெய்யானி | பங்களாதேஷ் |
| கொல்கட்டா | ஹீக்ளி | இந்தியா |
| கட்டாக் | மஹாநதி | இந்தியா |
| கிளாஸ்கோ | கிளையடி | இங்கிலாந்து |
| ஹாம்பர்க் | எல்பி | ஜேர்மனி |
| கராச்சி | சிந்து | பாகிஸ்தான் |
| லண்டன் | தேம்ஸ் | பிரித்தானியா |
| லக்னோ | கோமதி | இந்தியா |
| லூரியானா | சட்லஜ் | இந்தியா |
| நாசிக் | கோதாவரி | இந்தியா |
| நியூயோர்க் | ஹட்சன் | அமெரிக்கா |
| ஒட்டாவா | ஒட்டாவா | கனடா |
| பாட்னா | கங்கை | இந்தியா |
| ரோம் | திபர் | இத்தாலி |
| சூரட் | தப்தி | இந்தியா |
| வாரனாசி | கங்கை | இந்தியா |
| விஜயவாடா | கிருஷ்ணா | இந்தியா |
| வார்சா | விஸ்டுலா | போலந்து |
| வோஷிங்டன் | போடாமாக் | அமெரிக்கா |
| ஒட்டாவா | செயிண்ட்லாரன்ஸ் | கனடா |
| ரங்கூன் | இர்ரவாடி | பர்மா |

# மெக்சிக்கோவில் மரப்பாறைகள்

மெக்சிக்கோ நாட்டின் தெற்கே உள்ள ஜீனி என்ற இடத்தில் சுமார் 5கோடி ஆண்டுகளுக்கு முன் முளைத்த மரங்கள் காணப்படுகின்றன. இவை பல்வேறு கால மாற்றங்கள் காரணமாக இறுகிபாறை வடிவில் உள்ளன. உலகில் இது போன்ற மரப்பாறைகள் எங்குமில்லை என்று சொல்லப்படுகிறது. எல்லோஸ்டோன் என்று அழைக்கப்படும் இந்த இடம் உலகில் கண்டு வியக்கத்தக்க பகுதிகளில் ஒன்றாகும்.

# கடலின் அடியில் ஆராய்ச்சி

நாம் வாழும் புவியின் 510 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவு சமுத்திரங்களினால் சூழப்பட்டது. எனினும் இப்பாரிய சமுத்திரங்கள் பற்றித் தெரிந்துகொள்ள பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வுகளின்படி ஆழ்கடலில் பல வருடங்களுக்கு முன்பு புதையுண்ட பல படிவுகள் காணப்படுவதாகவும், அவை மனிதனின் நடவடிக்கைகளுக்கு மூலப்பொருட்களாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

முதலாவது ஆய்வு கடலின் அடித்தளத்தில் பல்வகையான மீனினங்களும் வேறு கடல்வாழ் உயிரினங்களும் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும் 4ஆயிரம் மீற்றர் ஆழமான பகுதியில் காணப்படுபவை எவையென்பது பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

30 வருடங்களுக்கு முன்பு யப்பானிய விஞ்ஞானிகளால் இது தொடாபாக நடத்தப்பட்ட ஆய்வின்படி கடல்வாழ் உயிரினங்களில் இருந்து பல அதிசயத் தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. தற்போது உலகில் பரவியுள்ள கொடிய நோய்களுக்கான மருந்து வகைகள் கடல்வாழ் உயிரினங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனக்கூறப்படுகின்றது.

அவ்வாறான விலைமதிப்பற்ற பொருட்களுள் புற்றுநோயைக் குணமாக்கக் கூடிய மருந்துகளும், அழகுசாதனப் பொருட்களுக்கான மூலப்பொருளும், சூழலைச் சுத்தப்படுத்தக்கூடிய பொருட்களும் ஆடைகளைச் சலவை செய்யும் பொருட்களும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேலும் ஆய்வுகள் நடத்துவதற்காக விசேட கப்பல் ஒன்று பயன்படுத்தப்பட்( ர்ளது.

இக்கப்பல் 210 மீற்றர் நீளமும், 38 மீற் ர் அகலமும், 57000 தொன் நிறையும் கொண்டது. இக்கப்பல் பாரிய பாரந்தூக்கியைக் கொண்டது. இது 4ஆயிரம் முதல் 7ஆயிரம் மீற்றர் வரையான ஆழ்கடலில் ஆய்வுகளை மேற்கொள்ளும். இது ஒரு தானியங்கிக் கப்பலாகும். இந்த யப்பானிய ஆய்வு நடவடிக்கைகளில் மேலும் 20 நாடுகள் பங்கேற்றுள்ளன. மேலும் இக்கப்பலின் ஆய்வுகளின் மூலம் அண்டைநாடுகளில் புவிநடுக்கம் ஏற்படக்கூடிய ஏதுக்களையும் கண்டுபிடிக்கக்கூடியது. 2005 வரைக்கும் இக்கப்பல் ஆய்வுகளை மேற்கொள்ளும் எனினும் இதன் உதிரிப் பாகங்கள் பரிசோதனை செய்யப்படவுள்ளது. இத்தகைய ஆய்வுகளின் மூலம் உலகின் பொருளாதார, சுற்றுச்சூழல் சுகாதார பிரச்சினைகள் பல வற்றுக்கு விடைகாணமுடியும்.

# சிறுநீரக கோளாறுக்கும் இதயநோய்க்கும் நெருங்கிய தொடர்புண்டு.

நமக்கு ஏற்படும் நோய்கள் சிலவேளை வெளிப்படையாகத் தெரிவதில்லை. சிலருக்கு நோய் ஏற்பட்டது தெரியவருமுன்னரேயே இறப்பு நேரிடுகிறது. சிறுநீரகம், இருதயம் போன்ற உள் அவயங்களில் பாதிப்பு ஏற்படினும் அவற்றைக் காலம் தாழ்த்தியே அறியமுடிகிறது. நோயை இனங்காண முன்பாக ஒருவர் இறக்க நேரிடுவது மிகவும் வேதனையானது.

மேற்படி அவயங்களில் பாதிப்பு ஏற்படுவது மற்றும் மூளையில் குருதி கசிதல் போன்றவை திடீர் மரணத்தை ஏற்படுத்துகின்றன. அதற்கு முக்கிய காரணமாயமைவது அவற்றில் குருதி பெருகுதலே என ஆய்வுகள் மூலம் அறிய வந்துள்ளன. இவ்வாறு உயர் குருதி அழுத்த நோய்க்கு உலகில் 600 மில்லியன் பேர் உள்ளாவதாகவும், அவர்களுள் 13 வீதமானோர் இறப்பைச் சந்திப்பதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வின் மூலம் அந்நாட்டு முதியோர்களில் 3பேர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் தற்போது முதியோர்களுக்கு மட்டுமன்றி கொலஸ்ரோல் அதிகமுள்ள இளைஞர்களும் இதனால பாதிக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் நோய் வருமுன்னரே எச்சரிக்கையாக இருப்பது நன்மையளிக்கும் என வைத்திய பரிசோதனை கூறுகிறது. குருதிப்பெருக்கு நோய் உள்ளவர் அது தீவிரமாகுமுன் கண்டறிந்து மேற்படி இதயசிறுநீரக மூளை நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். அந்த வகையில் இரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்து கட்டுக்குள் வைத்திருப்பது நன்று. ஒருவரின் சாதாரண இரத்த அழுத்தம் 120/80 ஆக இருப்பது நன்று.

இது மூன்று வயது குழந்தைக்கும் பொருத்தமாகும். போதுமான வரை பழங்களையும், மரக்கறி உணவுகளை சாப்பிடுவது நன்று. கொழுப்பில்லாத பால் அருந்துவது உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்து விடும். அத்துடன் உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி போன்றவையும் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொள்பவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு 3மடங்கு அதிகம் என ஜேர்மன் நாட்டு ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. மாரடைப்பு ஏற்பட்ட 100 பேர்களிடம் ஆய்வு நடத்தியதில் அவர்களில் 12இல் ஒரு நபர் மாரடைப்பு வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொண்டதாகத் தெரிவித்தார். மேலும் இத்தகைய பாதிப்பு பெண்கள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட ஆண்களையே அதிகம் பாதித்துள்ளதாக ஆய்வு தெரிவிக்கின்றது. ஆனால் இத்தகைய போக்குவரத்து நெரிசலினால் ஏற்படும் மாரடைப்புக்கு மன அழுத்தம் காரணமா? அல்லது வாகனப்புகை காரணமாக மாசு படிந்த சுற்றுச்சூழல் காரணமா? என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. காரில் செல்பவர்களுக்கு மட்டுமல்லாமல், பஸ் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்பவர்களுக்கும், போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொள்ளும் போது மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. காரில் செல்பவர்களுக்கு 2.6 வீதமும், பேருந்தில் பயணம் செல்பவர்களுக்கு 3.1 வீதமும், துவிச்சக்கர வண்டிகளில் செலலும் போது நெரிசலில் மாட்டிக் கொள்பவர்களுக்கு 3.9 வீதமும் மாரடைப்புவர வாய்ப்பு இருக்கிறது.

இதயநோய்களுக்கும், சிறுநீரக கோளாறுகளுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. இதய நோய்களால் உயிரிழக்கும் பெண்களில் 4இல் 1பங்கு பேர் சிறு நீரகக் கோளாறுகள் காரணமாகவே உயிரிழப்பதாக கலிபோர்னியா சான் பிரான்சிஸ்கோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இவர்கள் இதய நோய்களால் பாதிக்கப்பட்டு இருந்த 700 பெண்கள் பற்றி மருத்துவ விபரங்களை 6 ஆண்டுகளாக தொடர்ந்து அலசி ஆராய்ந்த போது இந்த உண்மை தெரிய வந்தது.

# “இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான கல்விமுறைமையில் அரசியல் மயமாக்கல்”

> 1964 கல்வி வெள்ளை அறிக்கையில் பெற்றோர் விருப்பிற்கேற்ப போதனை ஊடகம், சிங்களம், தமிழ்மொழி வலியுறுத்தப்பட்டது.
>
> இதில் நாம் கவனிக்கவேண்டிய விடயம் யாதெனில் பெரும்பான்மையினரே சுயபாஷையை அதிகம் வலியுறுத்தினர். ஏனெனில் சிறுபான்மையினருக்குத் தென்னிந்திய தமிழ் நூல்கள் மற்றும் ஆங்கில அறிவில் மேல்நிலையில் நின்றமை பெரும்பான்மையினர் மத்தியில் அச்ச உணர்வை மேலோங்கச் செய்தமையே சுயபாஷையில் தீவிரத்தன்மையை வலியுறுத்தி வந்தமைக்குக் காரணமெனலாம்.

இலங்கையின் கல்வி வரலாறு நீண்ட காலத்தைக் கொண்டு இருப்பினும் இங்கு நாம் நோக்குவது சுதந்திரத்திற்குப் பின்னரான ஏறக்குறைய 50 ஆண்டுகளில் இலங்கை கல்வி முறைமையில் அரசியல் மயமாக்கல் எத்துணை அளவிற்கு காணப்படுகிறது என்பது பற்றியதாகும்.

1948 இல் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு நாட்டின் சுதந்திர அந்தஸ்திற்கு ஏற்ப “பொருத்தமான” முறைகளில் பல்வகை துறைகளிலும் புதிய கொள்கைகள் வகுக்கப்பட்டன. இதில் கல்வித்துறை முக்கிய இடத்தைப் பெற்றது. இக் கல்வித்துறையில் அரசியல் ரீதியிலான மாற்றங்கள் காலத்திற்கு காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்களினாலும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் அதிகாரமிக்க கட்சி அரசியலாலும் கட்சிக் கொள்கைகளினாலும் இலங்கை கல்விமுறைமையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின எனலாம்.

பாடசாலைக் கல்வியின் தோற்றம் பற்றி ஆராய்ந்த ஐரோப்பிய மானிடவியலாளர்கள் பண்டைக் காலப் பாடசாலைகள் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற உதவும் அரசியல் கருவிகளாகவே இயங்கின என்பர். “Yehudicohen” எனும் மானிடவியலாளரின் கருத்தின் படி நாகரிகமடையாத சமூகங்களைக் கைப்பற்றி தம்மோடு இணைத்துக்கொள்ள நாகரிகம்அடைந்த சமூகங்கள் அதற்கேற்ற கல்வி முறைகளை அறிமுகம் செய்தன என்றார்.

கல்வித் தேர்ச்சியுடையவராக ஒரு நாட்டு மக்கள் இருப்பது அரசுக்கு எப்போதும் சாதகமானதாகும். தத்துவஞானி பிளேட்டோ கருத்துப்படி சிறந்த கல்விப்பயிற்சியின் ஊடாகவே விசுவாசமிக்க குடிமக்களையும், ஆற்றல் மிகுந்த தலைவர்களையும் உருவாக்க முடியுமென்றார்.

பொதுவாகக் கல்வியினூடாக நடைபெறும் அரசியல், சமூக மயமாக்கல் நடைமுறையிலுள்ள அமைப்புக்களை அப்படியே பேணுவதையும் அதில் மாற்றங்களைச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டது. இந்த வகையில் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கல்விக்கொள்கையில் பின்வரும் மாற்றங்களையும் முன்வைப்புக்களையும் சுருக்கமாக நோக்கி, பின் அவை பற்றி அரசியல் மயமாக்கத் தன்மையை நோக்குவோம்.

1945இல் இலவசக் கல்வி முறை, மத்திய கல்லூரிகள் ஆரம்பம், சிங்களத் தமிழ் போதனா மொழி, மதிய உணவுத் திட்டம் ஆரம்பம்.

1948 களில் அனைத்துப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி, 1950 களில் மதிய உணவு நிகழ்ச்சித் திட்டம், 1951இல் 6-14 வயதிற் குட்பட்ட சிறார்களுக்கான கட்டாயக கல்வி, 1952இல் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம், 1962 இல் அரச உதவி பெறும் தனியார் பாட சாலைகள் அரசுடமையாக்கப் பட்டன, 1970 பாடவிதானம், பொதுக் கல்வி அமைப்பில் மாற்றம், பள்ளிக்கூடத்தில் சேரும் வயதெல்லை 6வயதாக்கப் பட்டது, 9ஆம் ஆண்டு பொதுக் கல்வி NCGE, 2ஆம் ஆண்டு உயர் கல்வி HNCE பாடசாலைக் காலம் 12 இல் இருந்து 11ன்றாகக் குறைக்கப்பட்டது. G.C.E (O/L), G.C.E (A/L) ஆகியவற்றுக்குப் பதிலாக NCGE, HNCE, உருவானது.

1980 களில் இலவசப் பாடநூல் வழங்கப்பட்டது. 1981 களில் புதிய கல்வி சீரமைப்பு கல்வி வெள்ளை அறிக்கை, இலவச மதிய உணவு நிறுத்தப்பட்டது. 12ஆம் ஆண்டு கல்வி மீளக் கொண்டு வரப்பட்டது. G.C.E.L (O/L), (A/L) மீள ஆரம்பிக்கப் பட்டது. பாடசாலைக் கொத்தணி அறிமுகம், தேசியக் கல்வி நிர்வகம் நிறுவப்பட்டது. இந் நிறுவனம மூலம் ஆராய்சி, பாட விதமான அபிவிருத்தி, ஆளணிப் பயிற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

1987 களில் ஆசிரியர் பயிற்சியின் பொருட்டு கல்வியற் கல்லூரிகள் (NCOE) நிறுவப்பட்டன. தேசியப் பாடசாலைகள் முறைமை அறிமுகம்.

1989 களில் இலவச மதிய உணவுத்திட்டம் மீள நடைமுறைப் படுத்தப்பட்டது. 1993 களில் இலவசச் சீருடை ஏற்பாடு அறிமுகம், 1990 களில் பன்முகப்படுத்தப்பட்ட கல்வி நிர்வாகம், 1995 களில் வலயக் கல்வி அலுவலக நிர்வாகம், தேசிய கல்விக் கொள்கை வரையப்பட்டது.

1996 களில் மதிய உணவு வசதி நிறுத்தப்பட்டது. புதிய கல்வி சீர் திருத்தத்திற்காக சனாதிபதி செயலணிக்குழு நியமனம். 5-14 வயது வரை கட்டாயக் கல்வி, க.பொ.த (சா/த) புதிய தொழில் நுட்ப பாடநெறி, பாடசாலையின் வியூகம், ஆசிரியர் மதிப்பீட்டுத் திட்டம், ஆசிரியக் கல்விக்காக தேசிய மேலாண்மை சபை.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத்திட்டம், பாடசாலை முன் நிலைக் கல்வி முதலிய சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக விளங்கியது.

மேற்கூறப்பட்ட கல்வித்துறை மாற்றங்களை நாம் பின்வருமாறு நோக்குவோம்:-

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே ஆங்கிலேயரின் செல்வாக்கால் ஆங்கிலம் இலங்கை கல்வித் துறையை ஆக்கிரமிப்புச் செய்திருந்தது. இதற்கு எதிராக சுயபாஷை இயக்கம் செயற்பட்டது. சேர்.பொன். இராமநாதன், அ.கனகரத்தினம், சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா, டபிள்யூ.தகநாயக்கா, டி.பி.ஜயா போன்றோர் சுயபாஷை விருத்திக்கு முன்நின்று உழைத்தனர்.

சாதாரண மக்களும் கல்வியில் உயர்நிலை பெறுவதற்குச் சுயபாஷையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. 1953 ஒக்டோபரில் தேசிய மொழிகளில் உயர் கல்வி பற்றிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதில் சிங்களம், தமிழ், உயர்கல்வி மொழி பற்றிய நிலைப்பாட்டில் ஆங்கில செல்வாக்குத் தவிர்க்க முடியாது இருந்தது. 1959 களில் தேசிய மொழி மூலம் பல்கலைக்கழக அனுமதி கோரும் மாணவர் தொகுதி உருவானது. பல்வேறு வாதப்பிரதிவாதங்களின் மத்தியில் கலைத் துறையில் தேசியமொழி ஊடகத்தை அமுலாக்குவதில் அரசு வெற்றி கண்டது.

1964 கல்வி வெள்ளை அறிக்கையில் பெற்றோர் விருப்பிற்கேற்ப போதனை ஊடகம், சிங்களம், தமிழ்மொழி வலியுறுத்தப்பட்டது.

இதில் நாம் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் பெரும்பான்மையினரே சுயபாஷையை அதிகம் வலியுறுத்தினர். ஏனெனில் சிறுபான்மையினருக்கு தென்னிந்திய தமிழ் நூல்கள் மற்றும் ஆங்கில அறிவில் மேல் நிலையில் நின்றமை பெரும்பான்மையினர் மத்தியில் அச்ச உணர்வை மேலோங்கச் செய்தமையே சுயபாஷையில் தீவிரத் தன்மையை வலியுறுத்தி வந்தமைக்குக் காரணமெனலாம்.

தேசியக்கல்வி ஆணைக்குழுவின் மற்றொரு முன்மொழிவு மலையக மாணவர்கள் அரச கரும மொழி மூலம் (அன்று சிங்களம் மட்டுமே அரச கரும மொழி)கற்க வேண்டு மெனக் கூறப்பட்டது. காரணம் தோட்டத் தொழிலாளர் இலங்கைப் பிரஜை அல்லர் என்பதும் எந்த நாட்டிலும் அதன் பிரஜைகள் அல்லாதோர் அந்நாட்டின் அரச கரும மொழியிலேயே கற்பது நடைமுறை என்பது காரணமாகக் காட்டப்பட்டது. இங்கு மலையகத்தில் குறிப்பிட்ட தொகையினர் பிரஜா உரிமை பெற்றவர்கள் என்பதை ஆணைக்குழு கவனத்திற்கொள்ளத் தவறியமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்குறிப்பிட்ட விடயத்தில் இருந்து அரசியற் தேவைகள் கல்விக்கோட்பாட்டில் குறுக்கீடு செய்வதனை அவதானிக்கலாம்.

1972இல் கல்வி சீர்திருத்தம் புதிய பாதையில் சிங்களம்/ தமிழ்/ தாய்மொழி என்ற பதங்களுக்குப் பதிலாக “கல்விமொழி” என்ற பிரயோகத்தை மேற்கொண்டமை. அன்றைய அரசியல் அழுத்தமே காரணமாகும். 1981இல் கல்வி சீர் திருத்த முன்மொழிவில் முதலாம் மொழி என்ற பிரயோகமே அதே வியாக்கியானத்திற்கு இடம் கொடுப்பதை நிராகரிக்க முடியாது எனலாம்.

1970 ஆம் ஆண்டினை இலங்கைக் கல்வி வரலாற்றில் ஓர் எல்லைக் கோடாகக் கொள்வார்கள். 1948இல் இந்நாட்டிற்குக் கிடைத்த சுதந்திரம் மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்களவு பிரதிபலிக்கவில்லை. சமூகப் பொருளாதார வாழ்வு குடியேற்ற நாட்டு சாயலையே கொண்டிருந்தது. கல்வியிலும் அத்தன்மையே மேலோங்கியிருந்தது.

1970 இல் ஆட்சிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியும், 1977 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அரசியற் கொள்கையில் இரு துருவங்கள் போன்றன. இப்பேதங்கள் கல்விக்கொள்கைகளிலும் பிரதிபலித்தன எனலாம்.

1971 ஆம் ஆண்டின் டட்லிசீயர்ஸ் அறிக்கை மூலம் பொருளாதாரத்தின் தேவைக்குப் பொருந்தாத ஆட்களை உருவாக்கும் விரையமாகவே கல்வித்துறையைச் சுட்டிக்காட்டினார். 1970 இல் இடம்பெற்ற தேர்தலை அடுத்து பதவிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பொருளாதாரப் பாதையும், கல்வியின் பாதையும் வெவ்வேறு திக்குகளை நோக்கியவையாக இருந்தன. இதனால இளைஞர் சமுதாயம் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது. அதன் வெடிப்பே 1971 இல் இடம்பெற்ற இளைஞர் புரட்சி. இதன் தீர்வின் ஒரு வழியாகவே “ கல்வியின் புதியபாதை” என அழைக்கப்பட்ட 1972 இன் கல்வி சீர்திருத்தமாகும். ஒரு சுதந்திர நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறையைப் படிப்படியாகக் கட்டியெழுப்புவது இதன் நோக்கமாகும். இதனடிப்படையில் கல்வியில் திருத்தங்களைச் செய்வது காலத்தின் தேவையாக இருந்தது.

1972 களில் கனிஷ்ட இடைநிலையில் (6-9 வகுப்புக்கள்) இடம்பெற்ற மாற்றங்கள் முக்கியமானதாகும். குறிப்பாக முன்தொழில் படிப்பு1 ( விவசாயம், வணிகம், மனையியல், மரவேலை, உலோகவேலை, மட்பாண்டவேலை, நெசவு) முன்தொழில் படிப்பு -11 (வீட்டுத் தொழில்கள் உட்பட அவ்வப் பகுதியில் உள்ள பிரதான தொழில்கள்) என்பன பாடசாலைப் பாடங்களாகப் புகுத்தப் பட்டன.

அடுத்து ஒன்றிணைக்கப்பட்ட பாடமாக விஞ்ஞானம். சமூகக் கல்வி காணப்பட்டது. இதன் மூலம் மாணவனது வாழ்க்கைக்கு வளமூட்டக் கூடிய பரந்த அடிப்படையிலான அறிவு வளர்க்கப்பட்டது.

மூன்றாம் நிலைக் கல்வியில் பல்கலைக்கழக அனுமதியில் 1970 களில் தரப்படுத்தல் அடிப்படையால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இதன் தாக்கம் இன்றுவரையான இன முரண்பாட்டிற்குச் சவாலாக இருந்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.

1972 களின் பல்கலைக்கழக மட்ட தொழிற்கல்வி விருத்தி 1977 புதிய அரசினால் கைவிடப்பட்டமை அரசியல் மயமாக்கலின் ஒரு விளைவாகும். பல்கலைக்கழக அனுமதியிலும், திறமை, மாவட்டம், பின்தங்கிய பிரதேசம் எனும் அடிப்படையில் “நன்முறைப் பாரபட்சம்” என்ற வகையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் சுதந்திரத்திற்குப் பின்னான சுமார் ஐம்பது ஆண்டுகாலப் பகுதியில் இருவேறு அரசியற் கட்சிகள் சர்வதேச நிலைமை புவிசார் அரசியற் கண்ணோட்டத்திலும், தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலும், தொடர்ச்சியான திட்டமிடலின்மையும் நிலையான கல்விக்கொள்கையை கடைப்பிடிக்க முடியாமற் போனது.

1991 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசியக்கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டப்படி முன்னைய கால தவறுகளை விடுத்து நிலையான கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. “ஒவ்வொரு அரசியல் மாற்றத்தை அடுத்தும் திடீர் தீவிர மாற்றங்களை கல்விக் கொள்கையில் கொண்டுவருவதைத் தவிர்ப்பது முக்கியமாகத்” தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கமாகும். இதன் மூலம் நிலையான கல்விக்கொள்கை ஆட்சி அரசியலுக்கப்பால் நாட்டின் நலனை நோக்கிச் செல்லும் எனும் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதிலும் பாடசாலைகளை மீளமைத்தல், ஆளணிப் பதவியுயர்வு முதலிய விடயங்கள் அரசியல் மயமாக் கலின் பாற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் முன்னைய காலங்களைப் போலன்றி நிலையான கல்வி விருத்தியை தேசிய கல்விக் கொள்கை பெற்றுத்தரும் என்பது யாவரினதும் நம்பிக்கை எனலாம்.

ந.செந்தில் வடிவேல்

# பணிநிலை வேண்டுகை

**பாதுகாப்பு உத்தியோகத்தர் பணி நிலைக்கான**

**விண்ணப்பம் கோரல்**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத தருக்கான பணிநிலை வெற்றிடம் உள்ளது.

இவ் வெற்றிடங்களை நிறைவு செய்ய ஆண்களிடம் இருந்து கீழ்க்காணும் தகைமைகளுக்கமைய வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

*கல்வித்தகைமை:- க.பொ.த (சா.த) (06 பாடங்களில் சித்தி)

*அகவை:- 25-35 வரை

*பிறதகைமை:-சான்றிதழ்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

*மும்மொழி அறிவுத்திறன் இருப்பது விரும்பத்தக்கது.

*சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31.10.2004 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கோ, அல்லது நேரிலோ தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.**

தொடர்புகளுக்கான முகவரி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
நடுவப்பணியகம்,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

(சி.10392)


## மாத்தறையில் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி மாத்தறையில் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளது.

மாத்தறை நகர மத்தியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த விஜயசேகர, லச்மன் யாப்பா மற்றும் சாகல ரட்நாயக்க ஆகியோருடன் பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர் நகரின் 7 இடங்களில் இருந்து புறப்பட்ட பேரணிகள் பின்னர் நகர மத்தியில் இணைந்ததும் அங்கு ஆர்ப்பாட்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. இது தொடர்பில் தகவல் அளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர நாட்டின் விலைவாசிகளுக்கு மத்தியில் அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை இதுவரை நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்தார். (32)


**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலாரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமோ தொடர்புகொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி10580)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 18 - 09 - 1932

மறைவு 24 - 09 - 2004

அமரர்

**பொன்னர் கதிரவேலு (புத்தூர் இரத்தினம்)**

*காலமெல்லாம் எமக்காக*
*கற்பூரமாய் உமைக்கரைத்து*
*நாமெல்லாம் நல்வாழ்வு வாழ*
*நாடி நின்ற எம் ஐயாவே!*
*முழுமதியே! எங்கள் தெய்வமே!*
*உங்கள் அன்பு முகம் எங்கள்*
*நெஞ்சை விட்டு அகலாது ஐயா!*
*எங்கள் நினைவுகளில் என்றும்*
*நீங்கள் நிலைத்திருப்பீர்கள்.*
*ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு*
*மீளாத்துயில் கொண்ட எம் தெய்வத்தின்*
*ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.*
*ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!*

இன்று (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் சிவநகரில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டி நிற்கிறோம்.

**என்றும் நினைவுகளுடன்**
**மனைவி,**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.**

(சி-10585)


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

# நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

**பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.**

தகைமைகள்:-

| | | |
|---|---|---|
| 01. கல்வித் தகைமை | :- | ஆண்டு 08 |
| 02. அகவை | :- | 21 தொடக்கம் 35 வரை |
| 03. உயரம் | :- | 05 அடி 05 அங்குலம் |

குறிப்பு:-

01 விண்ணப்ப முடிவு நாள் :- 05.11.2004

02 சம்பளம் :-
4430-5530 / 10X110 +2000.00=6430.00+சிறப்புக்கொடுப்பனவு 3000.00=9430.00

*03 விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு :- 07.11.2004 ஆம்நாள் விசுவமடு றெட்பானா "ஒளிநிலா" திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.*

*04 நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.*

*05 விண்ணப்பப்படிவங்களை முல் லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.*

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
முகாமையாளர்
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10277)


## 3ஆம் ஆண்டின் துயர நினைவுகள்

தாயின் மடியில் முத்தாக 20 - 06 - 1981

தாயக மண்ணின் சொத்தாக 23 - 10 - 2001



**2ஆம் லெப். ஈழராசா (தென்றல்-மாறன்)**

**செல்லத்தம்பி -நீதிவளவன்**

**வளலாய் - அச்சுவேலி**

*உடலாய் மறைந்து உள்ளத்தில் நிறைந்து*
*கடலாயான துயரில் தினமும் மூழ்கிக்கொதிக்கும்*
*மடலாயான விழிகளுள் மலரும் மகனே ஈழராசா*
*திடமுறு முந்தன் சிந்தை எமக்கில்லை எனினுமெம்*
*தேசக் கனவைச் சுமந்தாய் மகனே தேசொளி இணைந்து*
*தேசப்பாடல் வரிகள் தினமும் ஒலிக்கும் திசைகள் நிறைக்கும்*
*நேசமகனே உந்தன் நினைவுத்துயரை மனதில் வளர்க்கும்*
*பாசப்பிணைப்பில்தலைமகன் வழியில் தடைகள் தகர்ப்போம்*
*ஓசையின்றி நீதுயிலும் கல்லறை தொழுதிடற்காக வாழ்கின்றோம். இங்கு*

**உன்துயர நினைவு சுமக்கும்**
**உனது அம்மா-அப்பா**
**தம்பி- தங்கை.**

கிளிநொச்சி.
(சி-10281)

# பதவி எதுவுமே வேண்டாம் வெங்கையா நாயுடு அறிவிப்பு

மக்களவை, மாநிலங்களவை பதவி எதுவும் வேண்டாம் இனி பரலோக பதவிதான் என்று வெங்கையா நாயுடு விரக்தியுடன் கூறியுள்ளார். அகில இந்திய பா.ஜ தலைவர் பதவியைவிட்டு விலகிய வெங்கையா நாயுடு நேற்று முன்தினம் சென்னை கமலாலயத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது

கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுக்குப் பிறகு பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்தேன் அப்போது கட்சி நிர்வாகிகள் ஏற்றுக்கொள்ளவில்லை • இங்கு எல்லாம் கூட்டு பொறுப்புதான் தோல்விக்கு பொறுப்பேற்று விலகும் கலாசாரம் பா.ஜ.க.வில் இல்லை. எனவே தொடர்ந்து பணியாற்றும்படி கூறினார் அதன்படி பணியாற்றி வந்தேன் தற்போது என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரைக் கவனிக்க வேண்டி உள்ளது கட்சித்தலைவர் பதவி என்பது பொறுப்பானது. இரண்டையும் ஒன்றாகக் கவனிக்க முடியவில்லை.

அத்வானியின் தலைமையில் வாஜ்பாய் வழிகாட்டுதலில் பா.ஜ வளர்ச்சி காணும் இனிவரும் தேர்தல்களில் பா.ஜ.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. மராட்டிய மாநில தேர்தல் தோல்விக்காக நான் பதவி விலகியதாகக் கூறுவது தவறு. கட்சியில் பதவி சண்டை ஏதும் கிடையாது எல்லோரும் இணைந்து வெற்றிக்காகப் பணிபுரிந்து வருகிறோம் என்றார்.

# அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தைத் தடுத்த தமிழக அரசு மீது உயர் நீதிமன்றம் கண்டனம்!

## விரிவாகப் பதில்தர உத்தரவு

(சென்னை)

ஜெயலலிதா அரசின் அராஜகப் போக்கைக் கண்டித்து நடக்கவிருந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்குத் தடைவிதித்தது ஏன் என்று அரசுக்கு உயர் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜெயலலிதா அரசின் அராஜகப் போக்கைக் கண்டித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கடலூரில் நடத்த தி.மு.க. நகர செயலாளர் தங்கராஜ் திட்டமிட்டு இதற்கு அனுமதி கேட்டு பொலிசாரிடம் மனு கொடுத்தார். ஆனால் பொலிசார் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அனுமதிதர மறுத்து உத்தரவிட்டனர். இதை எதிர்த்து தி.மு.க நகர செயலாளர் தங்கராஜ் சார்பாக பாட்டாளி மக்கள் கட்சி வக்கீல் கேபாலு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி குலசேகரன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பாக பாட்டாளி மக்கள் கட்சி வக்கீல் அனந்தநாராயணன் ஆஜராகி, ஜெயலலிதா அரசைக் கண்டித்து எதிர்க் கட்சியினர் நடத்தும் பொதுக்கூட்டத்திற்கு பொலிசார் அனுமதி மறுத்தது சட்டவிரோதமானது. ஆகவே அதை ரத்துச் செய்து பொதுக்கூட்டம் நடத்த அனுமதி தர வேண்டும் என்று கூறினார்.

இதற்கு அரச வக்கீல் வெங்கடேஷ் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வாதாடினார். இதைக் கேட்ட நீதிபதி குலசேகரன் அரசுக்குக் கடும் கண்டனம் தெரிவித்து கருத்துக் கூறியதாவது; சனநாயக நாட்டில் பொதுக்கூட்டம் நடத்த உரிமையுள்ளது. அனைத்துக் கட்சி சார்பில் பொதுக் கூட்டம் நடத்தஅனுமதி மறுத்தது ஏன்? அதாவது அசம்பாவித சம்பவம் நடக்கும் என்று கருதினால் பொலிசார் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கலாம் இதற்காக ஒட்டுமொத்தமாகத் தடைவிதிக்கக் கூடாது. அரசியல் சட்டப்படி பேச்சுரிமையுள்ளது. சுதந்திர நாட்டில் கருத்துக்களைக் கூற அரசியல் சட்டப்படி உரிமை யுள்ளது. இதைத் தடைசெய்யக் கூடாது. இதன் அடிப்படையில் இந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தடைவிதித்துள்ளீர்கள்.? இதுபற்றி விரிவாகப் பதில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறினார். வருகின்ற 26 ஆம் திக திக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# வீரப்பனின் பிள்ளைகள் இருவரின் நலன்காக்க மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்து

## தமிழக முதல்வருக்கு அவசரக்கடிதம்

(புதுடில்லி)

தேசிய மனித உரிமை ஆணைக்குழு தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதியுள்ளது. அதில் வீரப்பனின் மகள்களின் படிப்புக்கு எந்தப்பாதிப்பும் வரக்கூடாது என்று கூறியிருக்கிறது.

சுட்டுக்கொல்லப்பட்ட வீரப்பனுக்கு வித்தியாராணி,பிரபா என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். மூத்தமகள் 14 வயது, வித்தியாராணி கோவை செயின்பால் மெட்ரிகுலேசன் பள்ளியில் எட்டாவது வகுப்பும்,12 வயதான இளைய மகள் பிரபா கடலூரிலுள்ள யோசப் மெட்ரிகுலேசன் பள்ளியில் ஏழாவது வகுப்பும் படித்து வருகிறார்கள். யோசப் பள்ளியிலிருந்து மகள் பிரபா நீக்கப்பட்டதாக வெளியான செய்தியை அடுத்து டெல்லியிலுள்ள தேசிய மனித உரிமை ஆணைக்குழு கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் தலைவி பூர்ணிமா அத்வானி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது; வீரப்பனின் மகள் பிரபா அவள் படிக்கும் பள்ளியிலிருந்து நிர்வாகத்தால் நீக்கப்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. வீரப்பனின் இரண்டு மகள்களது படிப்பு எந்தவகையிலும் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். சுட்டுக்கொல்லப்பட்ட வீரப்பன் செய்த தவறுகளுக்காக அவரது மகள்களின் படிப்புக்கு இடையூறு நேராமல் பார்த்துக்கொள்ளும்படி காவல் துறை அதிகாரிகளுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் உத்தரவிடக் கேட்டுக்கொள்கிறோம். இந்தக் குழந்தைகள் சமுதாயத்தின் சிறப்புக் கவனத்தையும், அன்பையும் பெறுவதற்கு உரிமை பெற்றவர்கள். தந்தையின் அன்பையும், ஆதரவையும் இழந்த இவர்கள் தங்களுக்கென்றொரு வாழ்க்கையை தந்தையின் குற்றக்கறை படாத வண்ணம் அமைத்துக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். . வீரப்பன் குடும்பத்தை குறிப்பாக அவரது மகள்களைப் பற்றிய செய்தியை வெளியிட வேண்டாமென்று பத்திரிகைகளையும், தொலைக்காட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். தேவையில்லாத விளம்பரம் அந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தை பாதித்துவிடும் .அதைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கூறியுள்ளார்.


## பணிநிலை வேண்டுகை

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரின் சோதனை நிலையங்களுக்கு எழுதுனர் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகைமை:-01) க.பொ.த (சா/த) தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சி.

02) க.பொ.த(உ/த) மூன்று பாடங்களில் தேர்ச்சி

ஊதியம்:- நேரில் தீர்மானிக்கப்படும்.

தகுதியுடையவர்கள் (இருபாலாரும்) 2004-11.01 ஆம் திகதிக்கு முன்னர் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப்பணியகம், போ.க.பிரிவு.கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

போ.க.பிரிவு,
கிளிநொச்சி

(5212)

## துயர் பகிர்கின்றோம்

### திரு.கதிர்காமு குணசேகரம்

எமது பிரிவைச்சேர்ந்த போராளியான திரு.க. திலகன் அவர்களின் அன்புச் சகோதரனாகிய திரு.கதிர்காமு குணசேகரம் அவர்கள் காலம் சென்ற செய்தி கேட்டு மிகுந்த கவலையடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

பணிப்பாளர்,போராளிகள்
பணியாளர்கள்,
தமிழீழ சுகாதார சேவைகள்

(சி.10283)





# பைசலாபாத் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
# சிறிலங்கா அணி வலுவான நிலையில்



சிறிலங்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பாகிஸ்தானின் பைசலாபாத் மைதானத்தில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று சிறிலங்கா அணி பலம் வாய்ந்த நிலையில் உள்ளது.

முதல் இன்னிங்சில் சிறிலங்கா அணியைவிட 21 ஓட்டங்கள் பாகிஸ்தான் அதிகமாகப் பெற்றிருந் தாலும் கூட தற்போது சிறிலங்கா அணி மூன்று விக்கெட்டுக் களை மாத்திரம் இழந்து 264 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.



முதலாவது இன்னிங்சில் சதம் பெற்ற திலான் சமரவீரவும் இரண்டாவது இன்னிங்சில் சதம் பெற்ற ஜெயசூரியவும் ஆடுகளத்தில் ஆட்டமிழக்காது உள்ளனர்.

சிறிலங்கா முதல் இன்னிங்ஸ் 243 ஓட்டம், துடுப்பாட்டத்தில் சமரவீர 100 ஓட்டம். பந்து வீச்சில் அக்தர் 5 விக்கெட்டைக் கைப்பற்றினார்.பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸ் 264 ஓட்டம். யசீர் ஹமீட் 52, மாலிக் 48, அப்துல் ரசாக் 39 ஓட்டங்களை முறையே பெற்றனர்.

பந்து வீச்சில் ரங்கன கேரத், பெர்னாண்டோ தலா இரண்டு விக்கெட்டுக்களையும், வாஸ், மாலிங்க, ஜெயசூரிய தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி முதல் விக்கெட்டை ஓட்டமெதுவும் பெறாமல் இழந்தது. அணித்தலைவர் அத்தப்பத்து முதல் இன்னிங்சைப் போன்று ஓட்டமெதுவும் பெறாது ஆட்டமிழந்தார்.

பின்னர் சனத் ஜெயசூரியவுடன் ஜோடி சேர்ந்த சங்கக்கார சிறப்பாக ஆடி 59 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து ஜெயவர்த்தன 57 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ஆட்டமிழக்காது சமரவீர 15 ஓட்டங்களையும், ஜெயசூரிய 131 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இது சனத் ஜெயசூரியவின் 13ஆவது டெஸ்ட் சதமாகும். பந்து வீச்சில் இதுவரை அக்தர் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி
# நியூசிலாந்துக்கு ஒரு இன்னிங்ஸ் 99ஓட்ட வெற்றி

பங்களாதேஷ் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 177 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் முகமட் அஷ்ரப்புப் 67 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பிராங்லின் 28 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலளித்த நியூசிலாந்து 402 ஓட்டங்களைப் பெற்றது.


துடுப்பாட்டத்தில் மக்மிலன் தனது முதலாவது சதத்தை நிறைவு செய்து 143 ஓட்டங்களைப் பெற்றார். மத்யூசிங்ளேயர் 76 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ராபிக் சிறப்பாகப் பந்து வீசி 122 ஓட்டங்களைக் கொடுத்து. 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலளித்து இரண்டாவது இன்னிங்சை ஆடிய பங்களாதேஷ் 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது. இக்பால் 49 ஓட்டங்களைப் பெற்றார். இதனடிப்படையில் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 99 ஓட்டங்களால் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி சிட்டகொங் மைதானத்தில் எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

# நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகளுடனான
# டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணியில் பிரெட்லீ



## ரிக்கி பொண்டிங் தெரிவிப்பு

இவ்வருட இறுதியில் தமது மண்ணில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பிரெட்லீயை இணைத்துக்கொள்வது பற்றிக் கவனத்தில் எடுக்கப்படும் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். 24 வயது பிரெட்லீ கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இவ்வருட ஆரம்பத்திலிருந்து அணியில் இடம் பெறவில்லை. எனினும் தற்போது அவர் முழுத்தகுதியுடன் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். தற்போது நடைபெறும் போட்டிகளில் துரதிஷ்ட வசமாக அவர் பங்கேற்க முடியாது விட்டாலும் இனிவரும் போட்டிகளில் அவர் பங்கேற்கலாம். இவரின் வரவின்மையால் மேலும் ஒரு சிறந்த பந்துவீச்சாளரான கஸ்பரோவிச்சுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. எனினும் நவம்பரில் ஆரம்பமாகும் நியூசிலாந்து பாகிஸ்தான் அணிகளுடனான டெஸ்ட் போட்டியில் பிரெட்லீ இணைத்துக்கொள்ளப்படுவார்.இந்நிலையில் அணியில் இருக்கும் அனைத்து வீரர்களும் சிறப்பாக ஆடுவதால் யாரை நீக்குவது என்பதில் பாரிய பிரச்சினை ஏற்படும் என்றார்.

# கிழக்கு ஆசிய கிரிக்கெட் தொடர்
# சம்பியன் அணிக்கு உலகக் கிண்ண வாய்ப்பு

கிழக்காசிய பசுபிக் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடர் ஒன்று முதற் தடவையாக வனெட்டு நாட்டில் நடைபெறவுள்ளது அடுத்த ஆண்டு செப்டெம்பர், ஒக்ரோபர் காலப் பகுதியில் இப்போட்டித் தொடரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்துள்ளது.

கிழக்காசியப் பசுபிக் பிராந்தியத்தில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளன அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடுகள் இப்போட்டித் தொடரில் பங்குகொள்ளும்.

ஆறு நாடுகள் இப்போட்டித் தொடரில் பங்குகொள்வதுடன் இதில் சம்பியனாகும் அணி 2007இல் மேற்கிந்தியத்தீவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெறுக் கொள்ளும். ஜப்பான், டொங்கா, இந்தோனேஷியா,சாமுவா, குக்தீவுகள், வனெட்டு ஆகிய நாடுகள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றன.




தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப்படும் மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த 3ஆவது கராத்தே சுற்றுப் போட்டி இன்று கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதற்காக விளையாட்டு மைதானம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட கராத்தே வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர். இப் போட்டியின் பிரதம தீர்ப்பாளராக இலங்கையின் கராத்தேயின் தந்தை சீகன் பொனிறொபேட் கலந்து கொள்ளவுள்ளார்.

# ஸ்கந்தா வி.க. நடாத்தும்
# காற்பந்து சுற்றுப்போட்டி

ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் இ. பசுபதி, அமரர் ப. செந்தூரன் ஞாபகார்த்த கால்பந்து போட்டி நேற்று ஆரம்பமானது.

முதல் நாள் போட்டியில் ஜெயந்திநகர் பிறைச்சன் பி அணியும், திருநகர் ஏ அணியும், இளைஞர் வட்ட ஏ அணியும், பளை சோலை அணியும், உழவர் ஒன்றிய பி அணியும் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின. உதயதாரகை அணி போட்டியின்றி அடுத்த சுற்றுக்குத் தெரிவானது.

போட்டித் தொடரின் இரண்டாம் நாளான இன்று எட்டுத் தொடக்கம் 14 வரையான போட்டிகள் நடைபெறவுள்ளன.

# யாழ்.மகாஜனக் கல்லூரியுடனான கடினப்பந்துப் போட்டி
# கிளிநொச்சி ம.வி.12 வயது அணி வெற்றி பெற்றது



இரு அணி வீரர்களும், பயிற்சியாளர்களுடன்

யாழ். தெல்லிப்பளை மகா ஜனக்கல்லூரி மைதானத்தில் 18ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிளி.ம.வி.யின் அணித்தலைவர் யோ.நிரோசன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார் முதல் இன்னிங்சை ஆட ஆரம்பித்த கிளி.ம.வி.யின் விக்கெட்டுக்கள் அனைத்தையும் யாழ்/ மகாஜனக்கல்லூரி வீரர்கள் 55 ஓட்டங்களுக்குள் சாய்த்தனர். முதல் இன்னிங்சில் கிளி/ம.வி அணியின் சார்பாகத் துடுப்பாட்டத்தில் யோ.கரிகரன் 14 ஓட்டங்களையும், உபதலைவர் ம.ஜனகன் 10ஓட்டங்களையும், கி.கிருசாந் 10ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்/மகாஜனக் கல்லூரி சார்பாக டிலைக்ஸன் 3விக்கெட்டுக்களையும், ஜதுகுலன், வைகுந்தன், கோகுலன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்சை ஆரம்பித்த யாழ்/ மகாஜனக்கல்லூரி தனது முதல் இன்னிங்சின் மூன்றாவது ஓவரில் அணித்தலைவர் நிரோசன் வீசிய பந்தில் தனது முக்கிய விக்கெட்டுக்கள் இரண்டை அடுத்தடுத்து இழந்தது. இந்த நிலையில் தமது ஓட்ட எண்ணிக்கையை மெல்லமெல்லச் சேகரித்து 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் கிளி/ம.வி.யின் 55 ஓட்டங்களை யாழ்/மகாஜனக்கல்லூரி சமப்படுத்திக்கொண்டது. முதல் இன்னிங்சை வென்றால் 7புள்ளிகளைப் பெற்று இந்த ஆட்டத்தையே தமக்கு வெற்றியாக்கிக் கொள்வதற்கு மகாஜனக்கல்லூரிக்கு ஒரு ஓட்டம் மட்டுமே தேவைப்பட்டது. இந்த ஒரு ஓட்டத்திற்கு அவர்கள் கைவசம் இரண்டு விக்கெட்டுக்களும் இருந்தன. இதனைவிட ஒரு உதிரி பெற்றாலும் வெற்றி மகாஜனக்கல்லூரிக்கே என்ற நிலையில் ஆட்டம் தொடர்கையில் ம.ஜனகன் தனது சாமர்த்தியமான பந்து வீச்சு மூலம் மகாஜனக்கல்லூரி அணியின் இரண்டு விக்கெட்டுக்களையுமே அடுத்தடுத்து சாய்த்து கிளி. ம.விக்கு பெருமை சேர்த்தார்.

யாழ்/ மகாஜனக்கல்லூரி சார்பாக ஞானா 9 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றார். பந்து வீச்சில் ம.ஜனகன் 4 விக்கெட்டுக்களையும், யோ.நிரோசன் 3 விக்கெட்டுக்களையும், க.சஞ்சீவன் 2 விக்கெட்டுக்களையும், வா.சஞ்சீவன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை அதிரடியாக ஆடிய கிளி.ம.வி. அணி 9 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 118 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டு யாழ்/மகாஜனக்கல்லூரியை துடுப்பெடுத்தாடப்பணித்தது. கிளி.ம.வி. சார்பாக அணியின் உபதலைவர் ம.ஜனகன் 37 ஓட்டங்களையும், க.சஞ்சீவன் 27 ஓட்டங்களையும், வா.சஞ்சீவன் 21 ஓட்டங்களையும், கி.கிரிசாந் 15ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் டிலக்ஸன் 2விக்கெட்டுக்களையும்,ஞானா 3விக்கெட்டுக்களையும், கோகுலன் 2விக்கெட்டுக்களையும், மதுசுதன் 1விக்கெட்டினையும் பெற்றனர். தனது இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த யாழ்/மகாஜனக் கல்லூரி அணி ஆட்ட நேரமுடிவின் போது6 விக்கெட்டுக்களை இழந்து 16 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. துடுப்பாட்டத்தில் சிறீகணேஸ் 22, கபிலன் 13, கோகுலன் 12 என ஓட்டங்களைப் பெற்றனர்.கிளி.ம.வி சார்பாகப் பந்துவீச்சில் ஜெ.கம்லேந்திரன் 2விக்கெட்டுக்களையும், ம.ஜெகதீசன், வா.சஞ்சீவன் தலா 1விக்கெட்டினையும் கைப்பற்றினர். போட்டி சமநிலையில் முடிவடைந்தபோதும் யாழ்/ மகாஜனக்கல்லூரி 6 1/2 புள்ளிகளைப்பெற, கிளி.ம.வி.அணி 71/2புள்ளிகளைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

# தென்னாபிரிக்க அணியில் இருந்து
# நம்பிக்கை வீரர் கிப்ஸ் விலகினார்



இந்தியப் பயணத்துக்கான தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியில் இருந்து நம்பிக்கை வீரர் கிப்ஸ் விலகுகிறார்.

தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கான தென் ஆபிரிக்க அணி அடுத்த வாரம் அறிவிக்கப்பட உள்ளது. இந்திய பயணத்தில் இருந்து நம்பிக்கை வீரர் கிப்ஸ் விலகுவ தற்கான வாய்ப்புக்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றது.


கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு தென்ஆபிரிக்க அணி இந்தியா வந்தபோது காப்டன் குரோனே, கிப்ஸ், போயோ உள்ளிட்டோர் சூதாட்டப் பிரச்சினையில் சிக்கினர். இந்த நிலையில் பழைய பிரச்சினையை டில்லிப் பொலிசார் தூசி தட்டியுள்ளது சம்பந்தப்பட்ட வீரர்கள் இந்தியா வரும்போது அவர்களிடம் நேரடியாக விசாரணை நடத்த டில்லிப் பொலிசார் முடிவு செய்திருந்தனர். முன்னதாக டில்லி பொலிஸ் அனுப்பி வைத்த கேள்விகளுக்கு கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர்களின் பதில்கள் தூதரகம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் வீரர்களிடம் இனி விசாரணை இருக்காது என்ற உறுதிமொழியை டில்லிப் பொலிசார் வழங்கவில்லை. எனவே விசாரணைக்குப் பயந்து இந்தியப் பயணத்தில் இருந்து விலக கிப்ஸ் முடிவு செய்திருக்கிறார்.

## இலங்கையில் வலைபந்தாட்ட சம்மேளனத்தினால்
# வலைபந்தாட்ட சங்கங்களுக்கிடையிலான
# வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் வலைபந்தாட்ட சங்கங்களுக்கிடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம்முறை முதன் முதலாக வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இப்போட்டியில் இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த 28 அணிகளில் 320 போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர். (10)

## சிந்தனைக்கு



சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல; அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப் படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## கவனம் இதிலில்லை !

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிசும் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கால தாமதம் இன்றி ஆரம்பிக் வேண்டும் எனத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஆதரவு தருகின்றோம்; அரசாங்கத்தைப் பாதுகாப்போம் இதனைத்தவிர வேறு என்ன வேண்டும்? என்பது போல் உள்ளது அவர்களின் கேள்வி.

இதே சமயம் விடுதலைப்புலிகள் இயக்கமும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதையே விரும்புகின்றது. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக பேச்சுவார்த்தைகளை எவ்வேளையிலும் ஆரம்பிக்கத்தாயார் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு அதாவது புலிகளின் நிலைப்பாடு சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பது என்பதே

ஆனால் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான எந்தவிதமான அறிகுறியும் அரச தரப்பில் இருந்து வெளிவருவதாக இல்லை. சில தகவல் ஊடகங்கள் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் நவம்பர்மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கத்தரப்பையும் விடுதலைப்புலிகள் தரப்பையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

இதேவேளை அரசாங்கம் இடைக்காலநிர்வாகம் தொடர்பானதொரு மாற்றுத்திட்டத்தைத் தயாரித்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைநடத்தத் தயாராகவுள்ளதாகவும் அறிவித்தது. அது மட்டுமல்ல விடுதலைப் புலிகள் இம்மாற்றுத்திட்ட யோசனைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடத்தத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்தது.

ஆனால் விடுதலைப்புலிகள் இதனை நிரகரித்தனர். இந்நிலையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படமுன்னர் அரசாங்கத்தின் யோசனைகள் முன்வைக்கப்படமாட்டாது என அரசாங்கத்தரப்புத் தெரிவித்தது. அதாவது அரசாங்கத்தரப்பானது அவ்வாறு எதற்கும் உடன்படவில்லையென மறுத்தனர். சந்தர்ப்பம் சூழ்நிலைக்குஏற்ப தனது நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக்கொண்டது.

இந்தவகையில் அடிப்படையில்சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக அரசாங்கம் உறுதியானநிலைப்பாடோ அக்கறையோ கொண்டதாக இல்லை என்பது வெளிப்படுத்தியது. அரசாங்கத் தரப்பு குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவின் இன்றைய குறிக்கோள் எவ்வாறு ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து நீடிப்பதுஎன்பதும் தற்போதைய அரசாங்கத்தை கவிழவிடாது எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது என்பது மட்டுமே ,அதற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகள் எதிலும் அவர்கள் கவனம் செலுத்தும் மனநிலையில்லை

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கரமசிங்க சனாதிபதி சந்திரிகாவிற்கு இறுதியாக விடுத்துள்ள வேண்டுகோற் 2005 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற வேண்டிய சனாதிபதித் தேர்தலை ஊர்ஜிதம் செய்ய வேண்டும் என்பதே, அதாவது அடுத்த ஆண்டு நவம்பரில் நடைபெற வேண்டிய சனாதிபதி தேர்தல் நடைபெறுமா? என்பதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதன் வெளிப்பாடே இதுவாகும்.

எதிர்க்கட்சித் தலைவரின் இவ்ஐயப்பாடு நியாயப்பாடானதொன்றே ஏனெனில் சனாதிபதி சந்திரிகா 2005 இல் பதவி துறக்கத்தேவையில்லை, 2006ஆம் ஆண்டு இறுதியில் பதவி துறந்தால் போதும் என்ற வாதமும் ஒருதடவை எழுந்து அடங்கியிருந்தது. அதாவது சனாதிபதி தேர்தலை சந்திரிகா குமாரதுங்க ஒருவருடம் முன்கூட்டியே நடத்தியததினால் முதல் பதவிக்காலத்தின் எஞ்சிய காலத்திற்கும் அவர் பதவியில் நீடிக்காலம் எனக் கூறப்பட்டது.

இது வலுவிழந்ததொரு வாதமானபோதும் சனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய செயற்பாடுகள் அவர் தொடர்ந்தும் அரசியலில் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கெனப் பெரும் முயற்சி மேற்கொண்டுள்ளதையே வெளிப்படுத்துவதாய் அவர்களது அதாவது ஏதோ ஒரு வகையில் அவர் அதிகாரத்தைத்தக் கவைக்கும் முயற்சியிலேயே அவரின் முழுக்கவனமும் செலுத்தப் படுவதாய்வுள்ளது.

இதற்கு அடுத்ததாக சந்திரிகாவின் கவலையானது தற்போதைய அரசாங்கத்தைத் தக்கவைப்பதும், ஜே.வி.பி மேற்கொள்ளும் குழிபறிப்பு நடவடிக்கையில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மீட்டெடுப்பதாகும் இவை இரண்டும் சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் இருப்புடனும், அதிகாரத்தைத் தக்கவைப்பதுடனும் நேரடியாகச் சம்பந்தப் பட்டதாகும்.இவை இரண்டு குறித்துக் கேள்விகளும், அவநம்பிக்கைகளும் இருக்கையில் சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை விடயத்தில் அக்கறை காட்டுவதென்பதோ சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டுவதென்பதோ சாத்தியமானதாக இருக்கப்போவதில்லை. நாட்டிற்காகவும் சமாதானத திற்காகவும் அரசாங்கத்தையும் அதிகாரத்தையும் அர்ப்பணிப்புச் செய்யஅவர் ஒன்றும் சித்தார்த்தன் கௌதம புத்தரல்லவே.

# 10 விடுதலைப்புலிகளை விடுவித்து அரசு புலிகளைச் சாந்தப்படுத்த முயல்கிறது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

10 விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுவித்து அரசு புலிகளைச் சாந்தப்படுத்துவதாக ஜே.வி.பி.எம்.பிக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் இரு ஊர் காவற்படையினரை விடுவித்ததற்கான அரசாங்கம் முன்னறிவித்தலின்றி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்காமல் 10 விடுதலைப்புலிகளை விடுதலை செய்தது. இதன் மூலம் முன்னைய ரணிலின் அரசாங்கத்தின் கொள்கையை சந்திரிகா பின்பற்றுகிறார். ரணில் புலிகளுக்கு என்ன வேண்டுமோ அதை நிறைவேற்றினார். அது போல் இந்த அரசாங்கமும் செய்கிறது என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# அடையாள அட்டை விநியோகிக்க 36 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

தேசியஅடையாள அட்டையை விநியோகிப்பதற்காக அரசாங்கம் 36 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி அடையாள அட்டைஇல்லாத அனைவருக்கும் ஒருவருட காலத்துக்குள் அவற்றைப்பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறப்படுகின்றது.இது தொடர்பாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு நேற்று முன்தினம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஒதுக்கப்பட்ட குறித்த தொகையிலிருந்து 30 கோடி ரூபா அடையாள அட்டைகளை பதிப்பதற்காக செலவிடப்படுமென்றும் 5கோடி ரூபா ஆட்சேர்ப்புக்காக பயன்படுத்தப்படுமென்றும் எஞ்சிய தொகையின் மூலம் கட்டட, வாகன வசதிகளைப் பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது

# அரச ஊழியர் சம்பளம் குறித்து தேசியக் கொள்கை வகுக்க குழு

அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பாக தேசியக் கொள்கை ஒன்றை தயாரிப்பதற்காக முழுமையான அதிகாரங்களை கொண்ட குழு ஒன்றை நியமிக்க பெது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

நியமனங்கள் தொடர்பான தேசியசபை நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக இவ்வாறான நடவடிக்கைகள் எழுந்துள்ளமை ஏற்ற விடயமென அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார். அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கும், அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிற்குமிடையில் நடபெற்ற பேச்சுவார்த்தையின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது தாம் ஐந்து முக்கியகோரிக்கையை முன் வைத்துள்ளதாக அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. அரச சேவைக்காக ஆட்களை சேர்த்துக் கொள்ளல், ஓய்வூதியங்களை துரிதப்படுதல் உட்பட தாம் முன்வைத்த பலகோரிக்கைகளுக்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்ததாக சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களும் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமய பா.உ.வுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு

சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த உடுவே தம்மாலோக தேரரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகம் அமைந்துள்ள அசப்புவவில் இந்த விசேட சந்திப்பு இடம் பெற்றதாகத் தெரிய வருகின்றது.

சிறிலங்கா வின் சபாநாயகருக்கு எதிராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ள நம்பிக்கை யில்லாப் பிரேரணை குறித்தே இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டதாகவும் தெரிகிறது. அரசினால் கொண்டு வரப்படவுள்ள சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு அளிக்கக்கூடாது என இச்சந்திப்பின் போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடுவே தம்மாலோக தேரரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

# சனாதிபதி சந்திரிகாவுடன் ஆறுமுகம் தொண்டமான் சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று சிறிலங்கா சனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

சனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இந்தப் பேச்சுவார்த்தையும் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது. சிறிலங்காவின் பாராளுமன்ற சபாநாயகருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு கோருவதற்காகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதில்லை என்பதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாடாக இதுவரையில் இருந்து வந்தது. எனினும், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்களிப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளக்கூடாது என்கின்ற ஒரு கோரிக்கை சனாதிபதி தரப்பினால் விடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாக்களிப்பில் கலந்து கொள்ளாவிட்டால், இயல்பாகவே சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆயுத தொழிற்சாலை

கற்பிட்டி, சாலியகமப் பகுதியில் ஆயுத உற்பத்திச்சாலை ஒன்றை சுற்றிவளைத்த மகம பொலிசார் 15 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் பல ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளார்கள்.

அங்கு உற்பத்தி செய்யப்பட்ட 9துப்பாக்கிகளும், 7 பிஸ்ரல்களும் உட்பட பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருந்த இரண்டு துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதுடன் துப்பாக்கி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும்உப கரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்சாலையில் இருந்து துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்தசிலரைக் கைது செய்திருப்பதாகவும் நிக்கவரட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற துப்பாக்கி ஒன்று 2500 ரூபா முதல் 8000 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# முன்னைய ஐ.தே.க. அரசாங்கம் மீது
# மங்கள சமரவீர ஊழல் குற்றச்சாட்டு

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பாரிய ஊழல்களில் ஈடுபட்டு வந்ததாக அமைச்சர் மங்கல சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார். அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகராக செயற்பட்ட ஜேம்ஸ் றொபட்சனுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வருடம் ஒன்றிற்கு 214 ஆயிரம் அமெரிக்க டொலர்களை ஊதியமாகச் செலுத்தியுள்ளது. அதே நேரம் ஜோன் என்ற வெளிநாட்டவர் ஆடை தெரிவு மற்றும் பேச்சுப் பயிற்சி என்பவற்றுக்காக மாதம் ஒன்றிற்கு 19 ஆயிரத்து 940 அமெரிக்க டொலாகளை அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொண்டதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஆலோசகர்கள் தமது நாட்டில் பெறுவதை விடவும் கூடுதலான தொகையை சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து பெற்று வந்துள்ளதாகவும் இவர்கள் தங்குவதற்கு ஆடம்பர மாளிகைகள் மற்றும் போக்குவரத்திற்கு சொகுசு வாகனங்கள் என்பவை அரசாங்கச் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இவர்கள் தமது சொந்த நாடுகளுக்குச்சென்று வருவதற்கான விமானப் பயண ஒழுங்குகளை அரசாங்கமே மேற்கொண்டதாகவும் வருடம் ஒன்றிற்கு இவர்கள் ஏழு அல்லது எட்டுத் தடவை தமது சொந்த நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளதாகவும் அமைச்சர் மங்கல சமரவீர தெரிவித்தா. (32)

## விடத்தல் தீவில் குடும்பப்பெண் மீது மத போதகர் பாலியல் வல்லுறவு

### நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

மன்னார் விடத்தல் தீவுப் பகுதியைச் சேர்ந்த மத போதகர் ஒருவர் 3 பிள்ளைகளின் தாயார் ஒருவரைப் பாலியல் பலாத்காரம் புரிந்து இருப்பதாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்தப் பெண் தனக்கு நடந்தவற்றை வவுனியா நீதிமன்றில் நீதவானுக்கு முன்னால் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருப்பதாகவும் விடத்தல் தீவுப்பகுதியில் மேற்படி போதகருக்குக் கீழ் பணியாற்றி வந்தபோது தன்னைத் திருமணம் செய்வதாகக் கூறி பாலியல் பலாத்காரம் புரிந்ததாகவும் தற்போது தான் இரண்டு மாதக் கர்ப்பிணியாக இருப்பதாகவும் அந்தப் பெண் நீதவானுக்குத் தெரிவித்துள்ளார். இந்த வழக்கு 01.12.04 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (21)

## திருமலை...

தொடக்கி அதனை நிர்வகித்து வந்த எஸ். சுந்தரலிங்கம் 'அன்பு இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதை அடுத்து, 'அன்பு இல்லம்' நிர்வாகம் பற்றி மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களம் சார்பில் சட்டத்தரணி ஏ.எம். அனிபுலெப்பை விண்ணப்பம் ஒன்றை நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார்.

"அன்பு இல்லம்" நிறுவனத்தின் நிர்வாகம், அங்குள்ள சிறார்களின் பராமரிப்பை ஏற்று நடத்துவதற்கு இரண்டு தொண்டர் நிறுவனங்கள் முன்வந்தன. ஒன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம், இரண்டாவது திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆகியன அவையாகும். மாகாண சிறுவர் நன்நடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் இவ்விரு விண்ணப்பங்களையும் பரிசீலித்து, இறுதியாகத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் விண்ணப்பத்தைத் தெரிவு செய்தார்.

'அன்பு இல்லம்' ஸ்தாபக நிர்வாகி சுந்தரலிங்கமும் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டிருந்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் தெரிவு செய்யப்பட்ட 'அன்பு இல்ல' பணிப்பாளர், சபையின் தலைவர் திருமதி சித்திதேவி பத்மநாதன், துணைச் செயலாளர் அ. பரசுராமன், பொருளாளர் சி. குமரகுருபரன், க. துரைராசா, செல்வி சுபாஜினி சித்திரவேல் ஆகியோரும் நீதிமன்றத்தில் சமூகமளித்திருந்தனர்.

சுந்தரலிங்கம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளும், பொலிஸ் தரப்பிலான சார்ஜண்ட் சமரசிங்கவும் விண்ணப்பத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கவில்லை.

## 2005...

டையை பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுமோட்டார் ஊர்திப்பதிவுப்பகுதியினர் கேட்டுள்ளனர்.

## சமாதானச்...

ஜாங்கச் செயலாளர் அதிர்ச்சி அடைவதாகக் கூறியுள்ளார்.

இலங்கையின் நலனைப் பொறுத்த மட்டில் சகல அரசியல் கட்சிகளும் ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வருவது இன்றியமையாததது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.இதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு தமது நாடு தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகளை வழங்குமெனவும் அவர் உறுதி வழங்கியுள்ளார்.

## செஞ்சோலை சிறுவர் இல்ல 13ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு



செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் 13ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செஞ்சோலை வளாகத்தில் பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டன. இந்த வகையில் செஞ்சோலைப் பிள்ளைகள் மரக்கன்றுகளை நாட்டுவதைப் படத்தில் காணலாம். (லோ)

## பாதுகாப்பு அமைச்சு ஊடக அதிகாரியாக தயாரத்னாயக்க நியமனம்

இராணுவத் தலைமை யகத்தின் ஊடகத்துறைப் பணிப்பாளராகவும், பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவின் ஊடக அதிகாரியாக்வும் பிரிகேடியர் தயாரத்னாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுத் தனது கடமையைப் பொறுப்பேற்ற ரத்னாயக்க சமாதானச் சூழல் நிலவும் இச் சந்தர்ப்பத்தில் மக்களுக்குத் தேவையான தகவல்களை உரிய முறையில் வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போது நிலவுகின்ற சமாதான சூழலில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளப் பொது மக்கள் விருப்பத்துடன் உள்ளனர். இராணுவப் பேச்சாளர் என்ற வகையில் எனது 25 வருட இராணுவ சேவை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இதுவரை செயற்பட்டது போன்று பொது மக்களுக்குத் தகவல்களை வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிதுள்ளார்.

## முல்லையில்...

1995 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 25ஆம்திகதி தனது சகோதரனான மரியதாஸ் அன்டனிதாஸ் என்பவர் இராணுவத்தால் கைதாகி காணாமற் போனதாக இவரின் சகோதரி மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்து இருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் நியாதிக்கம் கொண்ட மாவட்டமாக வவுனியா இருப்பதன் காரணமாக இந்த வழக்கை வவுனியா மாவட்ட நீதி மன்றத்திற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் மாற்றம் செய்து இருந்தது. இந்த வழக்கின் விசாரணைகள் வவுனியா நீதி மன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நீதவான் தனது பரிந்துரையினை நீதிமன்றில் வாசித்தார். மேற்படி வழக்கில் காணாமற் போனவராக கருதப்படும் மரியதாஸ் அன்டனிதாஸ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இருப்பதாக வவுனியா நீதிமன்றம் கருதுவதாகவும் இது சம்பந்தமாக இராணுவத்தரப்பில் வழங்கப்பட்ட சாட்சியத்தில் இராணுவம் தாம் மேற்படி நபரைக் கைது செய்யவில்லை, முல்லைத்தீவு இரணுவமுகாம் தாக்கப்பட்டதன் காரணமாக இருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிந்திருப்பதாகவும் தெரிவிப்பதன் காரணமாக குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணை மேற்கொண்டு மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்குமாறு வவுனியா நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதி மன்றுக்கு பரிந்துரை செய்வதாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். வவுனியா நெளுக்குளம் பகுதியில் 2000ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 15ஆம் திகதி வெள்ளை வானில் கடத்தப்பட்ட நபர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக இராணுவமே காரணமென வவுனியா நீதிமன்றம் கருதுவதாக வவுனியா மாவட்ட நீதவ்ான் மாணிக்கவாசகர் இளஞ்செழின் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார். 2000ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 15ஆம் திகதி வெள்ளை வானில் வந்தவர்களால் நெளுக்குளம் அம்பாள் தொலை தொடர்பு மையத்திற்கு முன்னால் அதிரடிப் படையின் சீருடை அணிந்தவர்களால் அரியதாஸ் விஜயகுமார் (வயது 22, கைதுசெய்யப்பட்டபோது) கைது செய்யப்பட்டுக் கொண்டு சென்றதாகவும் இராணுவம் தனது மகனைக் கைது செய்து இருப்பதாகக் காணாமற் போனவரின் தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து பின்னர் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து இருந்தார். இந்த வழக்கின் விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் இடம் பெற்று வந்தது. வவுனியா மாவட்ட நீதவான் தனது பரிந்துரையினை வாசித்தார். அப்போது வன்னி 11 பிரிகோட்டின் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றிய டொன் மனுவல்கே தீபால் அல்விஸ் 2004.06.15 ஆம் திகதி இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்கும் போது இந்த நபரை தாம் கைது செய்யவில்லை என்றும் எனினும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் கைது செய்ததாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் அறிக்கை மூலம் அறிந்து கொண்டதாக அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமானது அப்போது இராணுவத்தோடு இணைந்து செயற்பட்ட இயக்கமாகும். ஆயுதத்துடன் இருந்த இயக்கமும் கூட அவர்கள் அரசாங்கத்தின் அனுமதியுடனும் இராணுவத்தினரது அனுமதியினுடனும் தான் ஆயுதம் வைத்திருக்கமுடியும். மேற்படி இளஞன் கைதாகி ஜோசப் முகாமில் வைத்திருந்ததை கண்டதாக சாட்சி ஒருவர் சத்திய கடதாசி மூலம் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தால் சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டு இருப்பதை அறிந்தும் அதற்கு பொறுப்புள்ள அதிகாரியாக இருந்தும் நடவடிக்கை எடுக்காதது கண்டனத்திற்குறியது என்றும் சாட்சியங்களின் அடிப்படையிலும் விசாரணைகளின் அடிப்படையிலும் இந்த காணாமற் போன சம்பவத்திற்கு பிரதான காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இருப்பதாகவும் இந்த வழக்குக்கு உரிய தீர்ப்பினை வழங்குமாறு நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேன் முறையீட்டு நீதிமன்றுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

## நோர்வே...

டிற்கும் மேலாகி விட்டது. புதிய அரசு பதவி ஏற்றுள்ள இந்த நிலையில் அமைதி வழிமுறை எந்த நிலையில் இருக்கிறது எனக் கேட்டபோதே கரிம் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக கரிம் பீரிஸிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு.

அமைதிப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடக்குவதற்கு அரசின் சார்பில் ஒரு புதிய இடைக்கால நிர்வாகப் பிரேரணை ஒன்றைத் தயாரித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர அறிவித்திருந்தார். அது சர்ச்சையையும் ஏற்படுத்தியது. புலிகள் இவ்வாறு அரசின் திட்டத்தை நிராகரித்து பேச்சு வார்த்தையைத் தொடங்குவதனால் தங்களுடைய இடைக்கால நிர்வாகத் திட்டத்தின் மீது சில கருத்துக்களை இவைகளை அரசின் கருத்துக்கள் என்றுதான் நான் கூறவேண்டும். இவை அரசின் புதிய மாற்றுத் திட்டங்கள் அல்ல, என்று கருதலாம்.

அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்த கருத்துக்களுடன் நான் முரண்படவிரும்பவில்லை, அவரது வார்த்தைகள் என்னவாக இருந்தாலும் அதன் சாராம்சம் இதுதான்.

இது புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கு அரசின் உட்கட்டமைப்பில் இருந்துவரும் பதில்கள் கருத்துக்கள் என்றுதான் கொள்ளமுடியும் என்றார் .

ஆனால் இவ்வறான கருத்துக்களை ஏன் பேச்சு வார்த்தை தொடங்கிய பிறகு அந்தப் பேச்சு வார்த்தைகளின் போது முன்வைக்காமல் அதற்கு முன்னதாக வெளியே பொது இடத்தில் முன்வைக்க வேண்டும் என்று கேட்டபோது,

நீங்கள் சொல்வது நியாயமானதொன்று என்றுதான் நான் கருதுகின்றேன். ஒரு விதத்தில் பார்க்கப்போனால் அரசின் பதில் கருத்துக்களின் விபரம் வெளியிடப்படவில்லை இது அரசின் வல்லுனர்களுக்கு இடையில் நடந்த விவாதம்அவளவுதான் .

எனவே புலிகளின் பிரேரணைகள் அவைகளுக்குரிய முக்கியத்துவத்துடன் சரியாகக் கவனமாகப் பரீசீலிக்கப்பட்டுள்ளது. என்ற ரீதியில் இதை ஆக்கபூர்வமாகவே பார்க்கவேண் டும் என்றார் பீரிஸ்

அரசு பேச்சு வார்த்தைகளை எப்பொழுது தொடங்க முடியும் என்றுகோடி காட்ட முடியுமா தான் என்றதற்கும் பதிலளித்த பீரிஸ், நான் ஒரு காலவரையறைகளைப் பற்றிப் பேச விரும்பவில்லை. இம் மாதிரியான கால வரம்புகளைப் பற்றிப் பேசுவது பெரிதும் உதவியாக இருக்காது மேலும்அவை எதிர்காலத்தைப் பற்றி இருப்பதால் இவை எல்லாம் கடைப்பிடிக்க கூடியவையும் அல்ல என்றார்.

விடுதலைப்புலிகள் முன்னைய அரசிடம் இருந்ததைவிட தற்போதைய அரசிடம் சற்றுக்கூடுதலாக அவநம்பிக்கை கொண்டிருப்பது போல தோன்றுகிறதே என்று கேட்டதற்குப் பதிலளித்த பீரிஸ் அவர்கள்

விடுதலைப்புலிகள் ஆச்சரியப்படத்தக்க வகையில் தங்களது முயற்சியை காட்டியிருக்கிறார்கள். என்று தான் கருதுகின்றதாகவும் தேர்தலுக்கு முன்பு பிரச்சாரத்தில் எந்த அணிக்கும் தங்களது ஆதரவைத் தராமல் நடுநிலையே வகித்தார்கள். அவர்கள் நாட்டில் அதிகாரத்திற்குப் போட்டியிடும் இரண்டு கட்சிகளிடையே யாரை ஆதரிக்கப்போவதென்ற கருத்தை வெளிப்படுத்தவில்லை. சனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்போகும் எந்த அரசுடனும் தாங்கள் பேசத் தயார் என்று அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றதாகவும் தேர்தலுக்கு முன்னர் இவ்வாறாக பாராட்டத்தக்க வகையில் அவர்கள் நடுநிலை வகித்தனர். இப்போது புதிய அரசு வந்தவுடனும், அதே நிலை தொடர்கின்றது. அதே போர் நிறுத்தம், அனுசரணையாளர்கள், அமைதிச்செயலகம் என அதே அமைப்புக்களுடன் தொடர்கின்றன. அவர்கள் இந்த அமைப்புக்களினூடாக எங்களுடன் பேசி வருகின்றார்கள். அந்த அரசுடன் அவர்களுக்கிருந்த சௌன்ய நிலைமை புதிய அரசுடன் இருக்கின்றதா என்பது விடுதலைப்புலிகளுக்கு அகவயப்பட்ட ஒரு விடயம் அது பற்றி என்னால் கருத்துக் கூற இயலாது. என்றார் பீரிஸ்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.